Registered as a news paper. | பக்கங்கள்: பத்து | விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 | திருவள்ளுவர் ஆண்டு: 2034 பங்குனி 18 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 முஹறம் 28 (01.04.2003) செவ்வாய்க்கிழமை | இதழ் :180

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து
ராம்கோ
(சி-729)

# 'லங்கா முடித' கப்பல் மீது நேற்றிரவு தாக்குதல் கடற்படையினர் மூவர் காயமென அறிவிப்பு!

(கொழும்பு)

விடுமுறையில் சென்ற படையினரை ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணம் திரும்பிக்கொண்டிருந்த 'லங்கா முடித' கப்பல் நேற்று திருகோணமலைக் கடலில் வைத்துத் தாக்கப்பட்டது. இதில் மூன்று படையினர் காயமுற்றனர். படையினர் திருப்பித் தாக்கியதில் தாக்குதல் நடத்திய சிறிய படகு கடலில் முழ்கிவிட்டதாக, யாழ்.மாவட்டத்துக்கான இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இச்சம்பவம் நேற்றிரவு 9 மணிக்கு நடைபெற்றது. திருகோணமலைக் கரையிலிருந்து 20 கடல் மைல் தொலைவில் - நிலாவெளிக்கு அருகில் - இச்சம்பவம் நடைபெற்றது.

இதுபற்றித் தெரியவருவதாவது,

விடுமுறையிலிருந்து திரும்பிய சுமார் 1000 படையினருடன் லங்கா முடித கப்பல் வந்துகொண்டிருந்தபோது, திருகோணமலைக்கடலில் அக்கப்பல் அருகில் மீன்பிடிப் படகு ஒன்று வந்ததாகவும், அப்படகிலிருந்து கப்பலை நோக்கி துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதாகவும் படை வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது. இதனால், 'லங்கா முடித' கப்பலில் இருந்த மூன்று படையினர் காயமுற்றனர். கப்பலிலிருந்த படையினர் திருப்பித் தாக்கியதில், அச்சிறிய படகு அதிலிருந்தவர்களுடன் நீரில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணாணம் விநாசியர்



சுத்திச் சுத்தி சுப்பற்ற கொல்லைக்க என்டிறது இதைத்தான்.

# மாநகர வளாகத்தில் இராணுவ முகாம்; விடுதலைப் புலிகள் கடுமையான ஆட்சேபம்!

## பாதுகாப்பு அமைச்சருக்கு தமிழ்ச்செல்வன் கடிதம்

(கிளிநொச்சி)

**யாழ்ப்பாணத்தில் தனியார் ஹோட்டேல்களில் தற்போது இயங்கும் ராணுவ பிரிகேட் தலைமையகத்தை, யாழ். மாநகரசபை வளாகத்துக்கு இடமாற்றும் பொருட்டு இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானம், பொதுமக்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியிருப்பதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.**

தற்போது இரண்டு தனியார் ஹோட்டேல்களில் இயங்கும் தலைமையகத்தை முன்னாள் நகரசபை மண்டபம், மாநகரசபை அலுவலகங்கள், ஓய்வு விடுதி, யாழ். கோட்டையுடன் இணைந்த பொலிஸ் அலுவலகம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளை உள்ளடக்கிய பாரிய நிலப்பரப்பிற்கு மாற்றத் தீர்மானம் எடுத்திருப்பது ஆட்சேபத்துக்குரியதென, விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன், பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் - பிரபலமான இரண்டு பாடசாலைகள், பொது நூலகம், துரையப்பா விளையாட்டரங்கு மற்றும் புதிதாக அமைக்கப்படவுள்ள நீதிமன்ற வளாகம் ஆகியவற்றுக் கருகில் புதிய ராணுவத்தளம் அமைக்கப்படவுள்ளது.

இது தொடர்பாக பொதுமக்களும், அரசியல் கட்சிகளும் எச்சரிக்கைகளை விடுத்திருப்பதாக விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் பாதுகாப்பு அமைச்சருக்கு அறிவித்துள்ளார்.

சுபாஸ் மற்றும் ஞானம்ஸ் ஹோட்டேல்களில் இருந்து ராணுவ பிரிகேட் தலைமையகத்தை அகற்றுவதற்கு அரசாங்கம் எடுத்திருக்கும் தீர்மானத்தை வரவேற்கும் அதேவேளை, புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட இடத்தில் ராணுவ பிரிகேட் தலைமையகம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே தூதுவர் ஆஜராகத் தேவையில்லை

விடுதலைப் புலிகளுக்கு வானொலி ஒலிபரப்பு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டதை ஆட்சேபித்துத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் பிரதிவாதியான நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்போர்க், அடுத்த தடவை நீதிமன்றத்தில் ஆஜராகத் தேவையில்லையென மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வியன்னா உடன்படிக்கைக்கு இணங்க, தூதுவர் ஜோன் வெஸ்போர்க் இராஜதந்திர ரீதியிலான சிறப்புச் சலுகைகளைப் பெற்றுள்ளார் என, நேற்று சட்டமா அதிபரின் சார்பில் மேன்முறையீட்டு நீதிமன்றில் ஆஜராகிய மேலதிக சொலிசிட்டர் மார்க் தெரிவித்தார்.

இதனால், நோர்வேத் தூதுவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கோ அல்லது அவருக்கு எதிராக

(10 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் வெடிபொருள் மீட்பு!

திருமலையில் வடக்குப் பிரதேசமான ஜமாலியா கடற்கரைப் பகுதியில், நேற்று கொட்டில் ஒன்று அமைக்க முற்பட்டவேளை வெடிபொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

மூன்று பிளாஸ்ரிக் கொள்கலன்களில் நன்கு பொதி செய்யப்பட்ட 3071 ரவைகளும், 76 கிரனைட்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# வடமராட்சி ஆழ்கடலில் இனந்தெரியாத சடலம்!

வடமராட்சிக் கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள், நடுக்கடலில் சடலம் ஒன்று மிதந்ததைக் கண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

கடந்த மாதம் முல்லைத்தீவுக் கடற்பரப்பில் கொல்லப்பட்ட சீன மீனவர்களின் சடலங்களில் ஒன்றாக இருக்கலாம் என நம்பப்படுகிறது. எனினும் இச சடலம் இன்னமும் கரையொதுங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.(டி)

# நஸ்ரியாவில் அதிரடி; 12 அமெரிக்கர் பலி!



நஸ்ரியா நகர் அருகே அமெரிக்க விநியோகப் படையணி மீது ஈராக்கியப் படைகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் 12 அமெரிக்கப் படையினர் பலியாகியுள்ளனர். இவர்கள் சரணடைய முயன்றபோதும் ஈராக்கியரால் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கொல்லப்பட்ட படை வீரரின் சடலம் ஒன்று இராணுவ விநியோக வாகனம் அருகே கிடப்பதை ஈராக் தொலைக்காட்சி ஒளிபரப்பியது.

## பொது அமைப்புக்களின் எதிர்ப்புக்கு மத்தியில்

# முகாம் அமைக்கும் பணியில் தொடர்ந்தும் படையினர்

யாழ்.நகரின் மத்தியில் இராணுவ முகாம் அமைப்பதைக் கண்டித்து, பல அமைப்புக்கள் போராட்டம் நடத்த முடிவுசெய்துள்ள அதேசமயம், படையினர் தொடர்ந்தும் முகாம் அமைக்கும் பணியில் தீவிரமாக நேற்றையதினமும் ஈடுபட்டிருந்தனர். இராணுவ உயர் அதிகாரிகள் பலர், சம்பவ இடத்துக்கு வந்து நிலைமையைப் பார்வையிட்டனர்.

யாழ்.நகரின் முக்கிய கேந்திர நிலையங்களை உள்ளடக்கியதாக அமைக்கப்பட்டுவரும் இராணுவ முகாமினால், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படுவதோடு புரிந்துணர்வு உடன்படிக்கையின் விதியினையும் மீறுகின்ற செயல் எனக் கண்டித்து, பல்வேறு வழிகளிலே எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள பல தரப்பினரும் முனைந்து வருகின்றனர்.

இது தொடர்பாக இன்றைய நாடாளுமன்ற அமர்வில் அனைத்துத் தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்களுமே, ஒருமித்த குரலாகத் தமது எதிர்ப்பினை வெளிக்காட்டுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

அத்தோடு - இம்முகாம் அமைப்பது தொடர்பாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் பிரதமரின் கவனத்துக்குக் கொண்டுவர இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



துப்புரவுப் பணியில் நேற்றும் ஈடுபட்ட இராணுவப் புல்டோசர்.

மிகக் குறைந்த கட்டணத்தில் (9/= இருந்து) வெளிநாடுகளுக்கான தொலைத்தொடர்புகட்கும், இணைப்பு (Connecting calls ) அழைப்புகளுக்கும்
S.P. Enterprises Communication
NO: 379, Kasthuriyar road, Jaffna.
Tel: 021- 2225735 Tel/ Fax 021- 222 5736
(சி-733)

# எமக்கிடையேயான ஒற்றுமையை யாரும் குலைக்க முற்படாதீர்கள்!

## மாவை சேனாதிராசா எம்.பி. கோரிக்கை

கடந்த பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் எமக்கு வழங்கிய ஆணையின் பிரகாரம், தமிழ் தேசியக் கூட்டமைப்பினராகிய நாம் எமக்குள் ஒற்றுமையாகச் செயற்பட்டு வருகின்றோம். எம்மத்தியில் நிலவுகின்ற ஒற்றுமையைக் குலைப்பதற்கு வழிசமைக்காதீர்கள். எமக்குள் ஏற்படுகின்ற ஒற்றுமையை மேலும் பலமாகக் கட்டியெழுப்புவதற்கு நாங்கள் தந்தை செல்வாவின் நினைவாலயத்தில் சபதமெடுப்போம், சத்தியம் செய்வோம். அத்துடன், தந்தை செல்வாவின் வழியில் தொடர்ந்தும் தமிழினத்தை வழி நடாத்துவோம்.

-இவ்வாறு தந்தை செல்வா அறங்காவல் குழுவின் உப தலைவரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா, நேற்றுக் காலை தந்தை செல்வா நினைவாலயத்தில் இடம்பெற்ற 105 வது பிறந்த நாள் நிகழ்வில் உரை நிகழ்த்தியபோது தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும்போது, தமிழ்த்தேசிய கூட்டமைப்பினராகிய நாம், ஒருவரையொருவர் ஆதிக்கம் செலுத்துவதற்காகவோ அல்லது தவறுகளை நியாயப்படுத்துவதற்காகவோ, . யாருக்காகவும் வக்காலத்து வாங்குவதற்காகவோ கூட்டமைப்பாக இணையவில்லை. கடந்த 2001 ஆம் ஆண்டு அமெரிக்கா மீது ஒசாமா பின்லேடன் தாக்கியதைத் தொடர்ந்து, பயங்கரவாதம் என்ற சொல் முழுமைபெற்று, அவர்களையும் இதிலே அடக்குங்கள் என்று சந்திரிகா அம்மையார் அறிவித்தவேளை, விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் என்று பட்டம் சூட்டித் தனிமைப்படுத்துவதை விரும்பாமல், அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து - எம்மோடு இணைந்து வேலை செய்யக்கூடிய அனைத்து இயக்கங்களும் ஒன்றிணைந்து வேலை செய்யவேண்டுமென அழைப்பு விடுத்தோம். அந்த வகையில் விடுதலைப் புலிகளின் புரிந்துணர்வோடு நாங்கள் கூட்டமைப்பாக இணைந்து, இனிமேல் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் பேசித்தான் இந்த நாட்டினுடைய அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்பட்ட வேண்டும் என்று மக்களிடம் அழைப்பு விடுத்தோம்.



எங்களுக்கு மக்கள் ஆணை தந்தார்கள். தற்போது, விடுதலைப் புலிகளின் தலைவருடன் நாம் ஏற்படுத்திக்கொண்ட புரிந்துணர்வுடன், இலட்சியத்தை நோக்கிச் செல்ல வேண்டும் என்கின்ற குறிக்கோளுடன், நாடாளுமன்றத்திலும் வெளியிலும் ஒரு தேசியக் கூட்டமைப்பாக செயற்படுகின்றோம்.

விடுதலைப் புலிகளுடன் பேசித்தான் சிங்கள அரசுகள் தீர்வை எடுக்க வேண்டும் என்று, சர்வதேச ரீதியாக நாம் அறிவித்தலை விடுத்தோம்.

தற்போது புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகி ஒரு வருடம், ஒரு மாதம் கடந்துவிட்டது. இன்னமும் இந்த யுத்தம் முற்றுமுழுதாக நின்றுவிடவில்லை. யாழ்ப்பாணத்தில் மட்டும் 30 வீத நிலப்பரப்பு உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் பல மக்கள் பாதிப்படைந்துள்ளனர். இதனை நாம் ஏற்றுக் கொள்ள முடியாத ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம்.

அமைச்சரவையே தீர்மானம் எடுத்து, தந்தை செல்வாவின் தூபிக்கு முன்னால் பாரிய இராணுவ முகாம் ஒன்றினை அமைத்து வருகின்றது. இதற்கு ஒரு முடிவு கிடைக்காது விட்டால், தமிழர் தேசியக் கூட்டமைப்பின் எல்லா அமைப்புக்களும் இணைந்து போராட்டம் நடாத்துவோம் என்றார். (சு,ரா)

# அரசுக்கு எதிராகப் போராட பெரும் தொழிற்சங்க கூட்டமைப்பு

## எதிர்க்கட்சிகள் இணைந்து அமைப்பு

தொழிலாளர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கும் , அரச நிறுவனங்கள் தனியார் மயமாக்கப்படுவதை எதிர்த்தும், 113 தொழிற்சங்கங்கள் ஒன்று கூடி நடவடிக்கை எடுக்கவிருப்பதாக ஜே.வி.பியின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

'உரிமைகளைப் பாதுகாக்கும் தொழிற்சங்கச் சம்மேளனம்' என்ற பெயரில் ஆரம்பிக்கப்படவுள்ள இந்த அமைப்பில், சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி., மக்கள் ஐக்கிய முன்னணி ஆகியவற்றின் தொழிற்சங்கங்களோடு, பல தொழிற்சங்கங்களும் இவ்வமைப்பில் இணையவுள்ளன.

தற்போதுள்ள அரசாங்கம் இந்தத் தொழிற்சங்கங்களுக்கு எதிராக இயங்கி வருவதால், அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு இந்த அமைப்பு செயற்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# குற்றச்செயலை கட்டுப்படுத்தவே மரணதண்டனை அமுலாகிறது

## அமைச்சர் ஜோன் அமரதுங்க

(கொழும்பு)

அதிகரித்துவரும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் ஒரு அங்கமாகவே, மரணதண்டனை மீண்டும் அமுல்படுத்தப்படவுள்ளதாக உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு தற்போது நடைமுறையில் உள்ள தண்டனைகள் போதுமானதல்ல என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

எதிர்வரும் மே மாதம் முதல் மரணதண்டனையை அமுல்படுத்துவது தொடர்பாக நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தப்படும். இதன்மூலம் மரணதண்டனையை அமுல்படுத்துவதா? இல்லையா என்பது பற்றி விரிவான கருத்துப் பரிமாற்றம் இடம் பெறும் எனவும் அவர் தெரிவித்தார்.

# கணிப்பீட்டுப் பெறுபேறினால் முடிவுகள் வரத் தாமதமாகிறது

## பரீட்சைத் திணைக்கள பணிப்பாளர்

2001 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சைகளின் பெறுபேறுகளை, இவ்வார இறுதியில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இப்பரீட்சைக்குத் தோற்றிய, 3 இலட்சத்துக்கும் அதிகமான பாடசாலை மாணவர்களின் பாடசாலை மட்டக் கணிப்பீடுகளும், பரீட்சைப் பெறுபேறுகளுக்குள் உள்ளடக்கப்பட்டிருப்பதால், இம்முறை பரீட்சைப் பெறுபேறுகள் தாதமடைந்ததாக அவர் கூறினார்.

இதேவேளை- இப்பரீட்சைக்கு, ஒரு இலட்சத்துக்கும் மேறபட்ட தனிப்பட்ட பரீட்சார்த்திகள் தோற்றியிருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

### பிரதமர் ரணில் சீனா விஜயம்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எட்டு நாட்கள் சீனாவுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார். இம்மாதம் 23 ஆம் திகதிமுதல் இச் சுற்றுப் பயணத்தை மேற்கொள்ளும் அவர், சீன ஜனாதிபதியுடன் முக்கிய பேச்சுக்களை நடத்துவார். இருதரப்பு வர்த்தக, பொருளாதார உடன்படிக்கையை எட்டும் வழிமுறைகள் குறித்து அவர் ஆராய்வார் எனவும் தெரியவருகிறது.

# இயல்பு வாழ்க்கையை மீளமைப்பதற்கு புனரமைக்கப்பட வேண்டிய இடத்தில் முகாம்

## புதிய ஜனநாயகக் கட்சி கண்டனம்

யாழ்.நகரின் மத்தியில் மீண்டும் இராணுவ முகாம் அமைக்கும் முயற்சி, மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு இடையூறான ஒன்றாகவே அமைகின்றது என, புதிய ஜனநாயகக் கட்சி வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது-

போரினால் யாழ்.நகரம் சிதைவடைவதற்கு முன் பெரும் எண்ணிக்கையான மக்களின் நடமாட்டம், போக்குவரத்து, இளைப்பாறல்களுக்குரிய இடமாக இருந்த மாநகர சபை வளாகம், சுப்ரமணியம் பூங்காவைச் சுற்றிய பகுதிகளிலும், யாழ்.மீனவர்களின் மீன்பிடித் தொழிலுக்குரிய கடற்கரைப்பிரதேசமாகவுள்ள இடத்தில் இப் புதிய முகாம் அமைக்கும் முயற்சி நடைபெறுகின்றது.

மேற்கூறிய இடங்கள்- மக்களின் இயல்பு வாழ்க்கையை மீளமைப்பதற்காக, புனரமைக்கப்படவேண்டிய இடங்களாகவும், யாழ்.மத்திய கல்லூரி, நூல்நிலையம், விளையாட்டரங்கம் போன்ற, மக்கள் கூடும் இடமாகவும் அமைந்திருப்பதால், இவ்விடத்தில் முகாமை அமைக்க முயல்வது, புரிந்துணர்வுக்கும் சமாதான முயற்சிக்கும் இடையூறாக அமையும் என்பதால், இதனை ஆட்சேபிப்பதுடன் இம்முயற்சியைக் கைவிடுமாறு புதிய ஜனநாயகக் கட்சி கேட்டுக்கொள்கின்றது என அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# மனைவியை அடித்த நபருக்கு ஆறுமாத சிறைத்தண்டனை

(யாழ்ப்பாணம்)

மனைவியை அடித்துத் துன்புறுத்திய ஒருவருக்கு, யாழ். நீதிவானால் ஆறுமாத கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பாக்கியநாதன் விஷ்ணுகாந்தன் என்பவர், தனது மனைவியை அடித்துத் துன்புறுத்தியுள்ளார். இதனால் பாதிப்படைந்த மனைவி, நீதிகோரி யாழ். நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்திருந்தார்.

இவ்வழக்கு மீதான விசாரணை நேற்று யாழ்.நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது, சம்பந்தப்பட்ட நபர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதன் நிமித்தம், இவருக்கு ஆறுமாத கடூழியச் சிறைத்தண்டனையை யாழ்.நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா விதித்தார். (லி)

# வடமராட்சி கடற்றொழிலாளருக்கு கூட்டுறவுச் சங்கம் மூலம் எரிபொருள்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர்களின் எரிபொருள் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு, வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் நடவடிக்கை எடுத்துள்ளதாக, சமாச செயலாளர் எஸ்.சூரியமூர்த்தி தெரிவித்தார்.

பிரதேச செயலரின் முயற்சியால், பருத்தித்துறை - புலோலி பலநோக்கு கூட்டுறவு சங்கங்களின் சமாசம், கடற்றொழிலாளர்களுக்கு எரிபொருள் வழங்க முன்வந்துள்ளது. தொண்டமனாறு, கற்கோவளம், பொலிகண்டி பகுதிகளைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களுக்கு பருத்தித்துறை பலநோக்கு கூட்டுறவுச் சங்கமும், இன்பருட்டியிலிருந்து கற்கோவளம் வரையிலான கடற்றொழியாளர்களுக்கு புலோலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கமும் எரிபொருளை வழங்கவுள்ளன.

வடமராட்சி வடக்கு சங்கங்களுக்கு ஒரு நாளைக்கு 1140 லீற்றர் மண்ணெண்ணையும், 2720 லீற்றர் டீசலும், 506 லீற்றர் பெற்றோலும், இடம்பெயர்ந்த சங்கங்களான பலாலி, மயிலிட்டி சங்கங்களுக்கு 3450 லீற்றர் மண்ணெண்ணையும், 280 லீற்றர் டீசலும் தேவைப்படுவதாக சமாசத்தின் செயலாளர் தெரிவித்தார்.


மலிவு விற்பனை

20% முதல் 50% வரை

புதுக்கணக்குப் போடவிருப்பதால்

பாடசாலை மாணவர்களுக்கான புத்தகங்கள், மருத்துவம், கணினி, பொறியியல், இந்திய பிரபல எழுத்தாளர்களின் நாவல்கள் போன்றன மலிவு விலையில் விற்பனையாகின்றது.

ஒருமுறை விஜயம் செய்யுங்கள்.

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

ராஜா யாழ்ப்பாணம்.

இன்று மட்டும் விஜய், ரீமாசென், வடிவேல் நடித்த



பகவதி

10.30, 2.30, 6.30

நாளை முதல்

ரோஜாக்கூட்டம்

(சி-732)

நிறைஞ்சனாஸ் சங்கானை

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

சரத்குமார், மீனா, வடிவேல் நடித்த

மாயி

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 மணி காட்சி

HOLLOW MAN

(சி-731)


# இன்றைய நாள் இனிய நாள்

## 01-04-2003 - செவ்வாய்க்கிழமை

| | |
|---|---|
| மேடம் :- | கொடுக்கல் வாங்கல் சிறப்பின்மை, தாழ்ந்தநிலை, சரீர சுகக்குறைவு, பிரயாணக் கஷ்டம் |
| இடபம் :- | ரோக நீக்கம்,பெரியோர் மதிப்பு, காரியானுகூலம், நன்மைதீமை இரண்டுமற்ற சமநிலை. |
| மிதுனம் :- | சரீர சோர்வு, மனச்சோர்வு, பிரயாணக் கஷ்டம், நிலைப்பிரிவு, நேத்திரரோகம், |
| கர்க்கடகம் :- | காரியவெற்றி, சத்துரு வெற்றி, தொழில் விருத்தி, மனமகிழ்ச்சி, தனதானியலாபம். |
| சிங்கம் :- | சமாதான வாழ்வு, சரீரத்தில் வியாதி, மனமகிழ்ச்சி, சத்துருபீடை. |
| கன்னி :- | தனவிருத்தி, சரீர ஆரோக்கியம், பொருட்சேதம், பிரயாசமிகுதி, குடும்பக்கவலை. |

பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்

| | |
|---|---|
| துலாம் :- | தருமகாரிய சித்தி, புதிய ஸ்தானம், அதிகார சித்தி, இரத்த சம்பந்தமான ரோகம். |
| விருச்சிகம் :- | ஏமாற்றம், பொருட் குறைவு, சிநேகலாபம், பூமிலாபம், புத்திர மகிழ்ச்சி. |
| தனு :- | சிநேகிதரால் கவலை, முயற்சிக்கேற்ற பலனின்மை, பொருட்சேதம், காரிய விக்கினம். |
| மகரம் :- | புத்திரசுகம், அதிகார விருத்தி, மனப்பயம், தொழில் குறைவு, புதிய ஸ்தானம். |
| கும்பம் :- | தேக ஆரோக்கியம், களஸ்திர மகிழ்ச்சி, நன்மதிப்பு. |
| மீனம் :- | காரிய சித்தி, சத்துரு வெற்றி, ஆபரணலாபம், வாக்கு வசீகரம், சரீர ஆரோக்கியம். |

# யுத்த நிறுத்த அமுலினால் புலிகள் பலமடையவில்லை

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

நோர்வே அரசாங்கமும் - முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் ஜனாதிபதியின் இப்போதைய ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமரும் இணைந்து முன்னர் வடிவமைத்திருந்த திட்டத்தை அடிப்படையாகக் கொண்டே புரிந்துணர்வு உடன்படிக்கை தயாரிக்கப்பட்டதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.



மாத்தறையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் -


2001 பொதுத்தேர்தலுக்குப் பின்பு, நோர்வே அரசுடன் வேலைத்திட்டங்களை ஆரம்பித்தபோது - கதிர்காமரும், நோர்வேயும் தயாரித்திருந்த நிகழ்ச்சிநிரலை அடிப்படையாகக் கொண்டே உடன்படிக்கை தயாரிக்கப்பட்டது.

இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையை அமுல் நடத்திய அதே வேளை, படைத்தரப்பை விழிப்புடன் இருக்கவும் பணிக்கப்பட்டிருந்தது. கடற்பகுதியில் பல சம்பவங்கள் இடம்பெற்றிருந்தபோதும், இரு தரப்பும் கண்காணிப்புக்குழுவின் முடிவுகளுக்கு இணங்கியதால் பிரச்சினைகள் எழவில்லை.

ஹக்கோனில் நடந்தபேச்சுக்களின்போது - யுத்த நிறுத்தத்தினால் அரச படைகள் பலமடைந்ததாகப் புலிகள் குற்றம் சுமத்தினர். கப்பல் மூழ்கடிக்கப்பட்டபோது புலிகள் யுத்தத்திற்குச் சென்றிருக்கலாம். யுத்த நிறுத்தத்தால் புலிகள் பலமடையவில்லை.

யுத்த நிறுத்தத்தின் காரணமாகச் சமாதானத்தின் தேவையே பெரிதும் உணரப்பட்டுள்ளது என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

## நாடும் நடப்பும்




# ஆயுதங்களுடன் சென்ற புலிகளைப் படையினர் திருப்பி அனுப்பினர்

## திருமலை தம்பலகாமத்தில் சம்பவம்

தம்பலகாமம் பிரதேசத்தில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே முறுகல்நிலை ஏற்பட்டு, பின்னர் அது முடிவிற்கு கொண்டுவரப்பட்டது.

கோவிலடியிலிருந்து மொறவேவ பகுதிகளுக்குப் புலிகள் செல்லும் பாதையில் இராணுவத்தினரின் ஜெயந்தபுர படைமுகாம் அமைந்துள்ளது. இப்படைமுகாம் அருகே ஆயுதங்களுடன் சென்ற விடுதலைப் புலிகளை - படையினர் தடுத்து நிறுத்தி, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரை அழைத்துக் கோவிலடிக்குத் திருப்பியனுப்பினர்.

ஏனையோரை மொறவேவ முகாமிற்குச்செல்லப் படையினர் அனுமதியளித்தனர். இதனால் அப்பகுதியில் முறுகல்நிலை ஏற்பட்டபோதும் பின்னர் அது முடிவுக்கு வந்தது.

# கிழக்கில் பௌத்தர்கள் மதம் மாற்றம் சவூதி அரேபியா மீது குற்றச்சாட்டு!

## பிக்குகளின் அமைப்பு தூதரகத்துக்குக் கடிதம்

(கொழும்பு)

கிழக்குப் பகுதியில் பௌத்தர்களை - இஸ்லாம் மதத்துக்கு மாற்றும் முயற்சியில் சவூதி அரேபிய அரசாங்கம் ஈடுபட்டிருப்பதாக ஜாதிக சங்க சம்மேளனய என்ற பௌத்த பிக்குகளின் அமைப்புக் குற்றஞ்சாட்டியுள்ளது.

பௌத்தர்களை மதம் மாற்றும் நடவடிக்கைகளைச் சவூதி அரசாங்கம் நிறுத்தவேண்டும் என்றும் தூதரகத்துக்கு ஜாதிகசங்க சம்மேளனய கடிதம் அனுப்பியுள்ளது.

சவூதி அரேபிய அரசாங்கத்திடமிருந்து கிடைத்துவரும் நிதியுதவிகளைக் கொண்டே மதம் மாற்றும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகவும், நிதியுதவிகளை உடன் நிறுத்தவேண்டும் என்றும் மேற்படி அமைப்புக் கேட்டுள்ளது.

இந்தக் கோரிக்கையின் பிரதிகள் நோர்வே, தென்கொரியா, பாகிஸ்தான், அமெரிக்கத் தூதரகங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

## விவசாயத்திற்கு அனுமதித்தமைக்கு அமைச்சர் ஹக்கீம் - புலிகளுக்கு நன்றி!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள விவசாயக் காணிகளை முஸ்லிம்களிடம் ஒப்படைக்கப் புலிகள் முன்வந்தமைக்காகப் புலிகளின் தலைமைக்கு அமைச்சர் ரவூப் ஹக்கீம் நன்றி தெரிவித்துள்ளார்.

காத்தான்குடியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முஸ்லிம்களைத் தமது காணிகளில் விவசாயத்தில் ஈடுபட அனுமதித்ததன் மூலம், புலிகளுக்கு நன்றியுடையவர்களாக இருக்கின்றோம். இந்த இரு இனங்களுக்கும் இடையிலான பரஸ்பர நம்பிக்கை - நெருங்கிய உறவுகளுக்கு வழிவிடும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

### லஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு

# ஆணையாளர் இல்லாததால் விசாரணைகள் பாதிப்பு!

லஞ்ச ஆணைக்குழுவுக்குக் கிடைக்கப்பெறும் புதியமுறைப்பாடுகள் பற்றி விசாரணைகளைச் செய்வதற்கு அந்த ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்கள் அனுமதி வழங்கத் தடையாக இருக்கின்றார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆணைக்குழுவின் ஆணையாளர் பதவி வெற்றிடமாகவுள்ளதால், ஏனைய அதிகாரிகள் இவ்வாறு நடந்துகொள்கிறார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

எனினும், முன்னர் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் குறித்துத் தொடர்ந்து விசாரணைகள் நடைபெறுகின்றன.

திடீர் தேடுதலுக்கு அங்கீகாரம் வழங்குவதில்லை என்றும் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. பெப்ரவரி மாதத்தில் ஒரேயொரு தடவை மாத்திரம் திடீர்சோதனை மேற்கொள்ளப்பட்டது எனத்தெரியவந்துள்ளது.

## ஆசிரிய கலாசாலை சான்றிதழ்வழங்கல்

(யாழ்ப்பாணம்)

2002ஆம் ஆண்டு ஆசிரிய கலாசாலை இறுதிப்பரீட்சையில் தோற்றி, சித்தி பெற்றவர்களுக்கான பேறுபேற்றுச் சான்றிதழ் இன்று பி.ப 2 மணிமுதல் 3 மணிவரை வழங்கப்படவுள்ளது.

மேற்படி சான்றிதழ் பெறுபவர்கள் நேரில் வருமாறு கலாசாலை அதிபர் கேட்டுள்ளார். (43)



வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் யூ.என்.எச்.சீ.ஆர் நிறுவனத்தினால் சுமார் 30 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட மாடிக் கட்டடத்தை யூ.என்.எச்.சீ.ஆர் யாழ்.வதிவிடப் பிரதிநிதி மோகன் மொறிஸ் திறந்துவைப்பதையும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி கே.மயிலேறும்பெருமாள் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

# விடுதலைப் புலிகளே தமிழரின் ஏக பிரதிநிதிகள்; சங்கரி தனது கூற்றை வாபஸ் பெறவேண்டும்!

## தொழிற்சங்க கூட்டத்தில் வற்புறுத்து

(அம்பாறை)

அகில இலங்கை அரசாங்கப் பொது ஊழியர் சங்கத்தின் ஒன்பதாவது வருடாந்த மாநாடு நேற்றுமுன்தினம் கல்முனை வெஸ்லி உயர்தரப் பாடசாலையில் நடைபெற்றது.

தமிழ்மக்களின் நியாயபூர்வமான போராட்டத்தினை - விடுதலைப் புலிகள் மட்டுமே காத்திரமானமுறையில் முன்னெடுத்துச் செல்வதால், விடுதலைப்புலிகளை ஏகபிரதிநிதிகள் இல்லையென்ற ஆனந்தசங்கரியின் கூற்று வேடிக்கையானது. அதனை உடனடியாக அவர் வாபஸ் பெறவேண்டும் எனத் தமது தலைமையுரையில் சங்கத்தின் தலைவர் லோகநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு உரையாற்றுகையில், வட-கிழக்குப் பகுதியில் முஸ்லிம்கள் பாதிக்கப்பட்டிருப்பதால், அவர்களைத் தனித்தரப்பாக-விடுதலைப்புலிகளும், அரசாங்கமும் கருத்தில் எடுக்கவேண்டும் எனவும் தெரிவித்தார். (08)

# கொழும்பு - மட்டு ரயில்சேவை 12 ஆம் திகதி முதல் ஆரம்பம்!

(கொழும்பு)

மட்டக்களப்புக்கும் - கொழும்புக்கும் இடையிலான ரயில்சேவைகள் எதிர்வரும் 12 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

1995 ஆம் ஆண்டிற்குப் பின்னர் மட்டக்களப்புக்கான ரயில்சேவை - வாழைச்சேனைவரை மட்டுமே நடைபெற்றது. இந்தச் சேவையை மீண்டும் மட்டக்களப்புவரை நடத்தவதற்கான ஏற்பாடுகளை ரயில்வேத் திணைக்களம் செய்துள்ளது.

இதற்கான நிதியுதவியினை நொராட் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியன வழங்கியுள்ளன. வாழைச்சேனையிலிருந்து மட்டக்களப்புவரை 32 கிலோ மீற்றர் நீளமான புகையிரப்பாதையைப் பதினொரு கோடி ரூபாய் செலவில் நிறைவு செய்யப்பட்டுள்ளது. (10)



தந்தை செல்வாவின் 105 ஆவது பிறந்ததின நிகழ்வில் - நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, அன்னாரின் சிலைக்கு மாலை அணிவிப்பதையும், பிரமுகர்கள் மலரஞ்சலி செலுத்துவதையும், தந்தை செல்வா நினைவுத்தூபியையும் படங்களில் காணலாம்.

## ஐஸ்வர்ய ஹோமம்

(சிறுப்பிட்டி)

யாழ். மக்களின் நன்மை கருதி-ஸ்ரீ கல்கி பகவானின் ஸ்வர்ணயுக அமைப்பகம் வழங்கும் ஐஸ்வர்ய ஹோமம், எதிர்வரும் 6 ஆம் திகதி மாலை 5 மணிக்கு பெருமாள் கோயிலில் உள்ள லக்சுமி நாராயணர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (78)

# பேச்சுக்களில் நம்பிக்கை வையுங்கள் இராணுவ ஆக்கிரமிப்பை நிறுத்துங்கள்

## சுரேஷ் பிரேமச்சந்திரன் அரசிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

மாநகரசபைக்கான நிலத்தை இராணுவம் தனது முகாமமைப்பதற்காகப் பலாத்காரமாக எடுக்க முயற்சிப்பது எந்தவிதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாத விடயமாகும். பாடசாலைகள், விளையாட்டரங்கம், பூங்கா, பொது நூலகம், நீதிமன்றம் போன்றவை அமைந்துள்ள ஓர் அமைதிப் பிரதேசத்தில் நிரந்தரமாக இராணுவம் நிலைகொள்ள முயற்சிப்பது நீண்டகால அமைதிக்குக் குந்தகமாகவே இருக்கும் என ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவரும் கூட்டமைப்பு முக்கியஸ்தருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக - அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

யுத்த நிறுத்தம் ஏற்பட்டு ஒரு வருடமாகிவிட்டது. நிரந்தர யுத்த நிறுத்தம், நிரந்தர சமாதானம் ஆகியவற்றுக்காகப் பேச்சுவார்த்தை நடாத்திக் கொண்டிருக்கும்போது, யாழ்.நகரில் தொடர்ந்து இராணுவத்தை வைத்திருக்கவேண்டியது அவசியந்தானா என்பதையும் அரசு சிந்திக்க வேண்டும்.

ஞானம்ஸ் ஹோட்டல், சுபாஷ் ஹோட்டல் போன்ற தனியார் இடங்களிலிருந்து வெளியேற வேண்டும் என்பதற்காக, மக்களின் பொது நிலங்களை ஆக்கிரமிப்பதானது எந்தவிதத்திலும் ஏற்றுக்கொள்ளப்படமுடியாததாகும்.

அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் என்ற பெயரில், ஆயிரக்கணக்கான மக்கள், தமது சொந்த இடங்களில் குடியமர மறுதலித்துவரும் இராணுவம், தொடர்ந்தும் முக்கிய நிலங்களையும், இடங்களையும் ஆக்கிரமிப்பதிலேயே ஆர்வம்காட்டி வருகின்றது. சாதாரணமாக மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய இராணுவம், தமது பாதுகாப்பிற்காக மக்களை, அவர்களது சொந்த இடங்களிலிருந்து விரட்டுவது கேலிக்குரியது மாத்திரமல்ல கண்டனத்திற்குரியதுமாகும்.

சமாதானத்திற்கான பேச்சுவார்த்தையை நடத்திக்கொண்டு, மக்களின் மீள்குடியேற்றத்தைத் தடைசெய்வதும், தொடர்ந்து நிலங்களை ஆக்கிரமிப்புச் செய்வதும் பேச்சுவார்த்தை மீது அரசுக்குள்ள நம்பிக்கையீனத்தையே காட்டுகின்றது.

எனவே, ஆக்கிரமிப்பைக் கைவிட்டுப் பேச்சுவார்த்தையில் நம்பிக்கை வைத்து செயற்படும்படி இலங்கை அரசைக்கோருவதுடன், யாழ். மாநகரசபைக்குரியதான நிலத்தை ராணுவம் ஆக்கிரமிப்பதை உடன் நிறுத்துமாறும் பிரதமரையும், இலங்கை அரசையும் கோருகினறோம். இல்லையேல் மக்கள் எழுச்சிகளும், மக்கள் போராட்டங்களும்தான் இதனைத் தடுப்பதற்கு வழி என்றால் - அதை நாங்கள் செய்யவும் தயாராக இருக்கின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

### வரணிப் பகுதியில்

## சிறுமி பலியான விபத்து; சாரதி தடுப்புக் காவலில்!


வரணி - கறுக்காய் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தொன்றில் சிக்கி விஜயலலிதா என்ற சிறுமி பலியான சம்பவத்தோடு தொடர்புடைய தட்டிவானின் சாரதியான கதிரன் அழகரத்தினம் (வயது 36) என்பவரைத் தடுப்புக்காவலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் கே.அரியநாயகம் உத்தரவிட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்ட சிறுமியின் சடலம் விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (116)

# யதார்த்தபூர்வமான படங்கள் மனசுக்கு சந்தோஷம் தந்தன

## 'சினி யாத்ரா' திரைப்பட விழா பற்றிய மக்கள் பார்வை

நான் இதுவரை பார்க்காத ஒரு திரைப்பட விழாவைத் தான் இங்கு பார்த்தன். ஒரு பார்வையாளன் எண்டவகையில் யதார்த்தமாக எல்லாப் படமும் அமைந்தது. அதோட, தனிப்பட்ட சிங்களவர்களினுடைய பாரம்பரியத்தை அறியக்கூடியதாக இருந்தது. அவையளின்ட படப்பிடிப்பு முறையோட அந்த கருப்பொருளும், அவையளின்ர மொழிவளமும் அறியக்கூடியதாக இருந்தது. அதோட இப்படியான நிகழ்ச்சிகள் யாழ்ப்பாணத்தில் அடிக்கடி இடம்பெறவேணும் எண்டது என்ர ஆசை. எங்கட தமிழினத்தின் தனித்துவமான வடிவங்கள் இப்ப எப்படியிருக்கு, வளர்ந்திருக்கு எண்டதை அறிஞ்சு - நாங்கள் இன்னும் முன்னேற உதவியாயிருக்கும். எங்களின்ர வளர்ச்சியும் இப்பிடியான நிலைக்கு வரவேணும் எண்டதுதான் என்ர ஆசை.



ஜஸ்ரீன் - யாழ்ப்பாணம்

☆ ☆ ☆

திரைப்படக் கதைகளில் வெளிப்பாடுகள் துல்லியமாக இல்லாமையினால் அவற்றை பற்றிய விமர்சனங்கள் கடினம்.

ஆனால், எனக்குச் சந்தோஷமாக இருக்கிறது. சமகால நிகழ்வுகளை அவர்களுடைய பார்வையில பார்க்கிறது வித்தியாசமான முயற்சி. எனவே, இதனை நான் பாராட்டுகிறேன்.



செல்வம் - யாழ்ப்பாணம்

☆ ☆ ☆

எங்கட **Family** களுக்குத் தேவையான கருக்களைச் சொல்லியிருக்கு. கூடுதலா **Family** லவாற பிரச்சினைகளைத்தான் சொல்லியிருக்கு. மற்றது எங்கட நாட்டில் இருக்கினற பிரச்சினைகளைச் சொல்லியிருந்தது நல்லாயிருந்தது. அவையள் தங்கட சைட்தான் சொன்னவயள் எண்டாலும், எடுத்துக்காட்டின விதம் நல்லாயிருந்தது.



நிவேதிகா - நல்லூர்

☆ ☆ ☆

காட்டின படங்களைப் பொறுத்தவரையில் எங்களின்ர தமிழ் ஏரியாவைப் பற்றி இல்லத்தானே. சிங்கள ஏரியாக்களின்ர கிராமப்புற வாழ்க்கை முறையள விளங்கிக் கொள்ளக் கூடியதாக இருந்தது. பழைய காலத்தில அந்தப் பக்கம் கிராம முறையில் இருந்தது எண்டதைப் பற்றி வடிவாக விளங்கக்கூடியதாக இருந்தது.



உமா - உடுப்பிட்டி

☆ ☆ ☆

நல்ல தயாரிப்புக்கள். வாழ்க்கையை அடிப்படியே கொண்டுவந்திருக்கு. இயல்பான ஓட்டம். நல்லா எல்லாரும் நடிச்சிருக்கினம். முக்கியமான பாத்திரங்களை எல்லாம் நல்லாச் செய்திருக்கினம். மற்றது - எங்கட பழைய நம்பிக்கையள், விதிகள் எல்லாத்தையும் காட்டியிருக்கு. நெறியாள்கை - நிதானமாக, வடிவமாகக் படத்தை உருவாக்கியிருந்தது. இதோடு - இப்பவாற தமிழப் படங்களைவிட நல்லா இருந்தது. வழமையாவர்ற படங்கள் மிதமிஞ்சிய கற்பனையில் இருக்கும். அந்தவகையில் - இப்படி நல்ல நல்ல படங்களைக் கொண்டுவரேக்க சீரழிவான படங்களைப் பாக்கிற ஆர்வம் குறையும்.



சிவகௌரி - திருநெல்வேலி

☆ ☆ ☆

சகோதர மொழியில நல்ல படங்களைச் செய்திருக்கிறார்கள். பிறமொழிச் சகோதரர்களின் பண்டிகைகளை நாம் பார்க்கக் கூடியதாக இருந்தது. மற்றது, இப்படியான படங்களைப் பார்க்க இப்பத்தான் முதல் முதல் சந்தர்ப்பம் கிடைச்சது. இது எங்களுக்கு ஒரு நல்ல சந்தர்ப்பம். பிரயோசனமாய் இருந்திச்சு. உண்மையில தென்னிந்தியச் சினிமாவுக்கும் இதுகளுக்கும் எவ்வளவு வித்தியாசம். இப்ப பாக்கிற போலித் திரைப்படங்களைவிட, இந்தத் திரைப்படங்கள்போல நல்ல திரைப் படங்கள் திரையிட வேணும். இதுதான் என்ர விரும்பம்.



அருண் - மருத்துவபீட மாணவன்

☆ ☆ ☆

எங்கட இந்தியன் படங்களிலும் பார்க்க, உண்மையா நேரில் நடக்கிறதைப் பார்க்கக் கூடிய மாதிரி இருந்தது.


படங்களைப் பாக்கேக்க ஒரு மகிழ்ச்சியா இருக்கு. ரெண்டு படம் பார்த்தன். ரெண்டுமே உண்மைப் படங்களா இருந்திச்சு. அந்தத் தன்மைகள் இந்தியன் படங்களில் இல்லை. ஆகவே உண்மைத் தன்மைகளைக் கூறுகின்ற படங்கள் கட்டாயம் வேணும்.



சுபாஸ் - சுழிபுரம்

☆ ☆ ☆

இண்டைக்கு நான் பார்த்த படங்களிலை ஒரு வித்தியாசமான யதார்த்தத் தன்மைகளைக் காணக்கூடியதாக இருந்தது. இப்படியான சினிமாக்களே இப்ப பெரிதும் தேவையான ஒண்டாக இருக்கின்றன.




கண்ணன் - யாழ்ப்பாணம்

☆ ☆ ☆

## வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

### மூன்றாவது அகவையில்



பெயர் : க.கிஷோதரன்
முகவரி: நாகர் கோவில் மேற்கு.

### நான்காவது அகவையில்

பெயர் :தி.தர்சாந்தி
முகவரி:திருவந்தோட்டம், கொற்றாவத்தை.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

### வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:-----------------------------------

முகவரி :-----------------------------------

பிறந்த ஆண்டு:-----------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

-----------------------------
பெற்றார் ஒப்பம்

# செஞ்சிலுவை சங்கத்துடன் தொடர்பு கொள்ளவும்!

(கொழும்புத்துறை)

செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுதம்முடன் தொடர்பு கொள்ளுமாறு ஆறுபேரின் பெயர்களை வெளியிட்டுள்ளது.

ஞானமலர் நாகராசா, 498, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். ஜெயந்தி ஸ்ரீமுருகேசமூர்த்தி, மே/பா திருமதி P.நடராசா, மணியங்காடு, கொக்குவில் மேற்கு. ஆர்.காளிராசன், சாந்தி அரிசி ஆலை, கோண்டாவில் கிழக்கு. தியாகராசா ஜெகதாம்பாள், 210, 6 ஆம் குறுக்குத்தெரு, மணியந்தோட்டம், கொழும்புத்துறை. பிரான்சிஸ் அம்மா, 42, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம். செல்லையா நாகராசா, காசிப்பிள்ளை கோவிலடி, தெல்லிப்பளை.

மேற்குறித்த பெயர்களையுடையோர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

# அலுக்கைச் சந்தியில் மீண்டும் படைமுகாம்

(சரசாலை)

அளவெட்டி - மல்லாகம் வீதியில் அலுக்கைச் சந்திக்கு அண்மையில் இராணுவமுகாம் மீளவும் அமைக்கப்பட்டு வருகின்றது.

இராணுவமுகாமைச் சுற்றி முட்கம்பி வேலிகளை அமைத்து, வீதியோரங்களில் பதுங்குகுழிகள் வெட்டப்பட்டு, மண் மூடைகள் அடுக்கப்பட்டு முகாம் புதிய வடிவில் மாற்றியமைக்கப்பட்டு பலப்படுத்தப்பட்டு வருகின்றது. (34)

# கிரிக்கெட் வீராங்கனைகள் தலைமறைவாகவில்லையாம்

## லண்டன் விசாவை நீடித்துள்ளனர்.

பிரிட்டனில் தலைமறைவானதாகக் கூறப்பட்ட மூன்று இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி வீராங்கனைகளும் விசா நீடிப்புப் பெற்றிருப்பதாக அணியின் முகாமையாளர் தெரிவித்தார்.

இவர்கள் மேற்கிந்தியத்தீவுகளுக்கான கிரிக்கெட் சுற்றுலாவை முடித்துத் திரும்பியபோது, லண்டன் ஹீத்ரோ விமான நிலையத்தில் தலைமறைவாகியிருந்தனர்.

இவர்கள் மூவரும் லண்டனில் அடைக்கலம் தேடியிருக்கலாம் என்றும் சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.

எனினும், இந்த மூன்று வீராங்கனைகளும் இலங்கைக் கிரிக்கெட் அணியின் முகாமைத்துவத்துக்குத் தெரியாமல் - தனிப்பட்ட ரீதியில் லண்டனில் விசாவை நீடித்துள்ளமை தெரியவந்துள்ளது.

தற்போது லண்டனில் தங்கியுள்ள இவர்கள் நாடு திரும்பியதும், முகாமைத்துவத்திற்குத் தெரியாமல் விசா நீடிப்புச் செய்தமைக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# புராதன ஊர்வன இன புதைபடிவம்


புராதனகால ஊர்வன இனத்தின் புதைபடிவங்கள் சீனாவிலும், மொங்கோலியாவிலும் மீட்கப்பட்டுள்ளது. Salamanders எனப்படும் இந்த ஊர்வன- 165 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தமை இதன் மூலம் நிரூபணமாகியுள்ளது. எரிமலைச் சாம்பலில் இவை புதைபடிவமாகக் கிடந்ததாக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.



நூற்றுக்கணக்கான இத்தகைய ஊர்வனவற்றின் புதைபடிவங்கள்- இப்பகுதியில் மீட்கப்பட்டுவருவதாகவும், புதைபடிவங்கள் முழுமையான நிலையில் இருப்பதாகவும் சிகாகோ பல்கலைக்கழக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். இவற்றின் வயிற்றுள் இவை இறுதியாக உண்ட புழுக்களின் படிவங்களும் அப்படியே காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.



# அமெரிக்க படைகளுக்கு ஈ மெயில்



ஈராக்கில் போர்புரியும் தமது அமெரிக்கப் படைகளுடன் - அமெரிக்காவிலுள்ள அவர்களது உறவினர் ஈ மெயில் மூலம் தொடர்புகொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் தினந்தோறும் அவர்களுடனான தொடர்பை ஏற்படுத்த வசதி ஏற்பட்டுள்ளது.

அமெரிக்கப் போர்க்கப்பல்களான யூ.எஸ்.எஸ். கொன்ஸ்ரலேஷன், யூ.எஸ்.எஸ். தராவா என்பவற்றிலுள்ள ஈ மெயில் பகுதியில் தினந்தோறும் நூற்றுக்கணக்கான தகவல்கள் உறவினர்களிடமிருந்து வந்து சேர்கிறது. ஒருநாளுக்குத் தாம் ஆறு ஈமெயில்களை அனுப்புவதாக அமெரிக்கக் கடற்படை வீரர் ஒரவரின் மனைவி தெரிவித்தார். அப்படைவீரரும் தினமும் தனது வீட்டில் நடக்கும் சம்பவங்கள், தனது பிள்ளைகளின் நலன்களை ஈ மெயில் மூலம் கேட்டறிந்துகொள்கிறார்.

# மிகப்பெரிய வைரஸ்

இதுவரை கண்டறியப்பட்ட வைரஸ் கிருமிகளில் மிகப்பெரிய வைரஸ் இனம் ஒன்று பிரிட்டிஷ் விஞ்ஞானிகளால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவை அமீபாக்களுள் ஊடுருவி வசித்து, மனிதரிடையே நியூமோனியாக்காய்ச்சலை உருவாக்கக் கூடியவை. 1992 இல் பிரிட்டனில் நீர் குளிர்மையாக்கித் தொட்டி ஒன்றில் எடுக்கப்பட்ட நீர் மாதிரியிலேயே இந்த பூத வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த வைரஸில் குறைந்தது 900 பிறப்புரிமை அலகுகள் காணப்படுகின்றன. பக்றீரியத்தைவிடப் பெரிய உருவமான இந்த வைரஸ், பெரிய கட்டடத் தொகுதிகளில் அமைக்கப்படும் குளிரூட்டி சாதனங்களில் காணப்படுகிறதாம். இந்த வைரஸ் புதிய வைரஸ் குடும்பமான Mimiviridae பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளது.







# நியண்டர்தல் மனிதனும் வினைத்திறன் கூடியவன்

முன்னர் கருதப்பட்டதுபோல் மனிதனின் மூதாதையான நியண்டர்தல் மனிதனின் கை - குரங்கின் கைபோன்றல்ல, அதுவும் ஹோமோசபியன்ஸ் இனத்தின் கைபோன்றே பல்வேறு பணிகளை மேற்கொள்வதற்கு வசதியாக வடிவம் பெற்றிருந்தது எனக் கூறப்படுகிறது.






கோடரிகள், கத்திகள் என்பவற்றை உபயோகிக்கக்கூடியவாறு கைவிரல்கள் அமைந்திருந்ததை நியண்டர்தல் மனிதனின் எலும்பு எச்சங்களை முப்பரிமாணத் தோற்றத்துக்கான கணினி மூலம் வடிவமைத்தபோது தெரியவந்துள்ளது எனச் சவுத்தாம்டன் பல்கலைக்கழகத்தினர் கூறுகின்றனர்.



230,000 - 28,000 வருடங்களுக்கு முன் பனிக்கட்டி யுகத்தில் வசித்த இம்மனித இனம், வேட்டையாடும் திறன் கொண்டிருந்தது. குரோமக்னன் மனித இனத்தின் தோற்றம் 40 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றியதை அடுத்து நியண்டர்தல் இனம் அழிந்துள்ளது.

# புவியின் காந்த புலத்தில் மாற்றம்!

பூமியின் காந்தவிசையில் மர்மமான முறையில் சில மாற்றங்கள் ஏற்பட்டு வருவதாக அண்மைய ஆய்வுகள் காட்டுகின்றன. கடந்த காலங்களில் காணப்பட்ட புவியின் காந்தவிசை இப்போது மாறுபட்டு வருவதாகவும், புவியியல் சார்ந்த மாற்றங்கள் பூமியின் வட - தென் முனைக் காந்தப்புலங்களில் மாற்றத்தை ஏற்படுத்துவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. எமது காலுக்கடியில் நடைபெறும் இந்த புரியாத மாற்றத்தை, விளங்கிக் கொள்ள முடியவில்லையென விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.



புவியின் மத்தியிலுள்ள உருகிய இரும்புக்குழம்பின் அசைவினாலேயே பூமியின் காந்தசக்தி உருவாகிறது. இந்த காந்தபுலச் சக்தியே பூமிக்கு வேண்டாத சூரியக்கதிர்கள் வந்தடைவதைத் தடுத்துப் பாதுகாக்கின்றது. திசைகாட்டிக் கருவியைத் தொடர்ந்து உபயோகிப்பவர்கள்- காந்தப்புலங்களின் இடங்களில் மாறுதல் ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடியும். பாறைகளின் அசைவுகள் கடந்த 7 ஆயிரம் ஆண்டுகளாக நடைபெறுகிறது. இவையும் இதற்குக் காரணமாக இருக்கலாம் என நம்பப்படுகிறது. இதனால், பூமியின் ஈர்ப்புத்தன்மையும் குறையும்நிலை ஏற்படுகிறது. 100 வருடங்களுக்கு 5 வீதம் காந்த சக்தியைப் பூமி இழப்பதாகப் பிரிட்டனின் புவியியல் ஆய்வுநிலையம் கூறுகிறது. இதன்படி ஆயிரம் ஆண்டுகளுக்குப்பின் வட - தென் துருவகாந்த ஈர்ப்பு முற்றிலுமாகத் திசைமாறலாம். ஆனால், இவையெதுவும் கடந்த காலத்தில் உயிரினங்களில் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை என்பது ஆறுதலான விடயம்.

# உலகப் புகழ் பெற்ற இயக்குநர்கள்

## அங்கம் - 03

கிரி.்.பித்துக்கு முந்திய படத்தலைப்புக்கள், படத்தின் கதையையே வெளிப்படுத்துவது மாதிரி மிகவும் நீளமானதாக இருக்கும். உதாரணத்திற்கு ஒன்றைப்பார்போம். "AND MARTHA REMEMVERED THE INFAMOUS TREATEMENT SHE HAD SUFFERED FROM THE WICKED LAND LORD" (நிலப்பிரபுவின் மிக மோசமான கொடுமைகளை, அவற்றால் பாதிக்கப்பட்ட மர்த்தா நினைத்துப்பார்த்தாள்). கிரி.்.பித் இந்த முறையையும் மாற்றிக்காட்டினார்.



கிரி.்.பித்.

மேற்குறிப்பிட்ட படத்தின் ஒரு காட்சி இப்படி அமைந்துள்ளது. காட்சிப்படி கதாநாயகியின் முகம் திரை முழுக்கத் தெரிகிறது. அவள் முகத்தில் பழைய சம்பவத்தை நினைத்துப் பார்க்கும் நினைவு உணர்வுகள் நெளிகின்றன. தொடர்ந்தும் முகம் மங்கி, அந்த நிலப்பிரபு மேற்கொண்ட கொடுமையான சம்பவங்கள் காட்சிகளாக விரிகின்றன. பார்வையாளர்கள் சட்டென்று இந்தக் காட்சியின் உட்பொருளைப் புரிந்து கொள்கின்றனர். இது மௌனப்படங்களின் காலமும்கூட! கிரி.்.பித் படைத்த மற்றொரு உத்திதான் .்.பிளாஷ்பேக் (FLASH BACK). 1914 - 15 ஆம் வருடத்தில் வெளியான பேர்த ஒ.்.ப்.எ நேஷன் (BIRTH OF A NATION) திரையுலகின் மகத்தான காவியம் மட்டுமன்றி, மகத்தான வெற்றிப்படமும்கூட. அன்றைய அவருடைய அரசியல் கணிப்புக்களும், இனப்பற்றும், அதன் விளைவாக அவர் படைத்த காட்சிகளும் இன்றைய நம்முடைய கொள்கைகளுடன் பெருமளவு முரண்பட்டே தோன்றும். இருப்பினும், தான் சொல்ல விரும்பியதைத் தெளிவாகவும், உறுதியாகவும், மனதில் அழுத்தமாகப் பதியும் விதத்திலும் கூறியுள்ளார் என்பதையாரும் மறுக்கமுடியாது!

இரண்டு பகுதிகளாக வெளிவந்த இந்தப்படம், 190 நிமிடங்கள் ஓடக்கூடியதாக அமைந்திருந்தது. இந்தப் படத்தில் ஓர் இடத்தில்கூட கமரா அசைவற்று நிற்கவே இல்லை. படம் முழுவதும் கமரா என்கின்ற பார்வையாளரின் கண் ஒரு விதக் கவிதை நடையில் பயணிக்கிறது.



பேர்த் ஒ.்.ப் எ நேஷன் படத்திலிருந்து ...

கிரி.்.பித்தின் இயக்கத்தில் காட்சிகள் எங்கெங்கு நடைபெற்றதோ, அங்கெல்லாம் பயணஞ்செய்தது. கமரா ஸ்ராண்டில் நிலையாகப் பொருந்தி இருந்தபடி படம் பிடிப்பதே இல்லை. கமரா சிலசமயம் பக்கவாட்டுகளில் திரும்பியது, சில சமயம் மேலும் கீழுமாக அசைந்தது. தேவைக்கு ஏற்றாற்போல் நடிகர்-நடிகையரை மிக நெருங்கியோ, விலகியோ மீண்டது. இத்கையை காட்சியமைப்புக்களால் கலைஞர்களின் மிகையான நடிப்பு தவிர்க்கப்பட்டது. முக உணர்ச்சிகள் தத்துரூபமாகவும், துல்லியமாகவும் மீடியம் ஷாட்டுக்களின் மூலம் பதிவுசெய்யப்பட்டன.

ஒரு காட்சிக்கும், மற்றொரு காட்சிக்கும் இடையிலான இணைப்பைத் துல்லியமான எடிட்டிங் மூலம் ஒன்று சேர்ப்பதும் கிரி.்.பித்தின் மற்றொரு சாதனை எனலாம். ஒரு காட்சி ஆரம்பம் முதல், இறுதிவரை அப்படியே படமாக்கப்பட்டு, முன்பின் பிசிறுகள் நீக்கப்பட்டு ஒன்றிணைப்பதே அதுவரை எடிட்டிங் முறையாக இருந்தது. கிரி.்.பித் இந்த முறையை முற்றிலு மாக நிராகரித்தார் என்றே கூறலாம். "ஏராளமான ஷொட்டுகளைக் கொண்டது ஒரு காட்சி. சில காட்சிகள் இணைந்ததே சூழல் (SEQUENCE) "என்று கூறுவாராம் கிரி.்.பித். இந்தமுறையே இண்டர்கட்டிங் எனப்படும் எடிட்டிங் முறையாகும்.




பேர்த் ஒ.்.ப் எ நேஷன் படத்திலிருந்து ...

கிரி ஃபித்


(தொடரும்.....)

# போர்க்களத்தில் நவீன தொலைத் தொடர்பு நுட்பம்






ஈராக்கில் நடைபெறும் யுத்தக்காட்சிகள் நமது வீட்டுக்குள் தொலைக்காட்சி மூலம் வருவதற்குப் பின்னணியில், முன்னணியிலுள்ள தொலைத் தொடர்புச் சாதனங்களே முக்கிய பங்கை வகிக்கின்றன. படைகளுடன் பயணம் செய்யும் மேற்கத்தையச் செய்தியாளர்கள் தம்முடன் சிறிய செயற்கைக்கோள் தொலைபேசிகள், சிறிய வீடியோ படப்படிப்பு Editing மென்கருவி, டிஜிட்டல் கமரா என்பனவற்றை எடுத்துச் செல்கின்றனர்.



1991 வளைகுடாப் போரின்போது, செய்தியாளர்கள் உபயோகித்த செய்மதித் தொலைபேசிகள் 40 கிலோ நிறையுடையதாக இருந்தது. ஆனால், இப்போது இவை கையடக்கக் கருவிகளாகிவிட்டன. தற்போது ஒரு தொலைக்காட்சிச் செய்தி நிறுவனம் இருவரை மட்டும் போர்க்களம் அனுப்பினால் போதுமென்றநிலை. ஒரு செய்தியாளர், ஒரு படப்பிடிப்பாளர் மட்டும் போதும். ஏனைய பணிகளை நவீன தொலைத் தொடர்பு இலத்திரனியல் சாதனங்கள் கவனித்துக்கொள்ளும்.

## திரை விமர்சனம்

# காதலுடன்



ஃபிலிம் தோன்றி முன்தோன்றாக் காலத்தே முன் தோன்றிய முக்கோண காதல் கதை. தியாகிகள் பென்ஷனுக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடைய முரளி, இந்தப்படத்திலும் அதே தியாகி வேலையைத் திறம்படச் செய்திருக்கிறார். தேவயானி - ராஜகுமாரன் தம்பதிகளின் சொந்தத் தயாரிப்பு என்பதால், தேவயானியே ஹீரோயின். இயக்குநர் ராஜகுமாரன்.

கல்யாணமா...? வேண்டவே வேண்டாம் என்று பதறியடிக்கும் முரளி, ஏன் திருமணம் வேண்டாம் என்பதற்கு நீண்ண்...ண்ட விளக்கம் கொடுக்கிறார். படம் துவங்கிய நிமிடத்திலிருந்து படம் முடியும் வரைக்கும் முரளி கொடுக்கும் லெக்சர் அப்பப்பா! ஒரு தீஸிஸ் எழுதக் காணும்.

அப்படிப்பட்ட முரளி - அம்மாவின் வற்புறுத்தலுக்காக முதலில் பெண்ணைப் பார்ப்போம். தனக்குப்பிடித்த அம்சங்கள் அத்தனையும் அவளிடம் இருந்தால், அம்மாவிடம் ஓ.கே சொல்வோம் என்ற முடிவோடு ஸ்ரீபெரும்புதூர் போகிறார். அங்குதான் தேவயானி எழுந்தருளியிருக்கிறார் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

கூடவே கல்யாணத் தரகர் வையாபுரியும், நண்பன் ரமேஷ்கண்ணாவும்! தனக்குப்பிடித்த ஒவ்வொரு அம்சங்களும் தேவயானிக்கும் இருக்க... மார்க்ஸ் போட்டுக்கொண்டே வருகிறது முரளி அண்ட் கோ! (இதற்காக ஒரு கொப்பியும் பென்சிலுமாக அலைகிறார் வையாபுரி.) எல்லாம் பிடித்துப்போய் தன் காதலை தேவயானியிடம் சொல்ல முரளி முற்படுகையில் தேவயானிக்கும் அப்பாஸுக்கும் காதல் என்று தெரியவருகிறது. பின் இருவரையும் சேர்த்துவைக்க முரளி படும்பாடுதான்... காதலுடன்!

அழகுப் பெட்டகமாக தேவயானியின் வீட்டிற்குள் அடியெடுத்து வைக்க முரளி அண்ட் கோவிற்கு அமையும் சந்தர்ப்பங்கள் பழம் நழுவி வாயில் விழும் கதைதான்.

ஆரம்பத்தில் மஜிக் நிபுணராக வரும் முரளியின் சாகஸங்களை ரசிக்கலாம். அதிலும், தேவயானிக்கு அவர் மஜிக் காட்டும் இடம், காதலின் முதல் ஸ்பரிசம்.

தன் காதலிக்காக அப்பா கேட்ட சீதனத்தை தானே சம்பாதித்து கொடுப்பதாக வாக்குறுதி கொடுக்கும் அப்பாஸ் - மும்பைக்குப் பயணமாகிறார். சற்றே ஒல்லியான தேகம், முகத்தில் குழந்தைத்தனம் மிஸ்ஸாகிவிட்டாலும், சப்போர்ட்டாக இருப்பார்.

இசை எஸ்.ராஜ்குமார் ஏமாற்றவில்லை. உனைத் தினம் எதிர்பார்த்தேன்- திரும்ப திரும்பக் கேட்க வைக்கும் மெலடி!

முதல் படத்தில் கண்தானம் செய்யச் சொன்ன இராஜகுமாரன்- இந்தப்படத்தில் சீதனக் கொடுமையைச் சொல்லியிருக்கிறார். பாவம் பார்க்காமல் அங்கங்கே கத்தரிக்கோல் வைக்கப்பட்டிருந்தால், கச்சிதமான ஒரு படம் கிடைத்திருக்கும்.


வினுச்சக்கரவர்த்தி, ராதாரவி இவர்கள் எல்லாம் என்னவோ பண்ண போகிறார்கள் என்று எதிர்பார்த்தால், யாரை கேட்டு எதிர்பார்த்தே... என்று சண்டைக்கு வருவார்கள் போலிருக்கிறது. பாவம் இயக்குநரே ஏமாற்றிவிட்ட பின் இவர்களைக் குறை சொல்லி என்ன செய்வது.?

- துஷி.

# வாரம் ஒரு யோகாசனம்

## சர்வாங்காசனம்

தரையில் மல்லாந்து மெல்லக் கால்களைச் சேர்த்து, நேராக உயர்த்திக் கழுத்து, தலைப்பகுதிகள் மட்டும் தரையில்படும்படி, இரு உள்ளங்கைகளால் பின் தட்டுக்களைத் தாங்கிக் கொண்டிருக்க வேண்டும். இவ்வாறு ஆரம்பத்தில் 2 நிமிடமும் பின்னர் 5 நிமிடமும் செய்தால் போதுமானது.



**சர்வாங்காசனத்தின் பயன்கள்**

இவ்வாசனத்தால் உடல்வளர்ச்சி, வனப்புத் தோன்றும், கழுத்து நரம்புகள் வலிமை பெறும், தூக்கத்தில் விந்து நழுவுவதைத் தடுக்கும், குண்டலி சக்தியை விழித்துக்கொள்ளச் செய்யும்.

கற்றுத்தருபவர்
**மா.மகாநேசன்** (கரவெட்டி)

# குழந்தைகளை உன்னிப்பாக கவனிக்க வேண்டிய பருவம்



(சென்றவாரத் தொடர்ச்சி)

ஒருநாள் இந்த வயதிலுள்ள பெண்பிள்ளை இரண்டு வாரம் பாடசாலைக்குப் போகவில்லை. காரணம் நோய் வந்துவிட்டது. நோய் மாறியதும் பாடசாலைக்குச் சென்றது. அங்கே காலை இடைவேளை நேரத்தில் அம்மாவை நினைத்து அழத் தொடங்கியது. வீட்டுக்கு வந்ததும் "ஏன் மகள் உங்களுக்கு என்ன நடந்தது?" என்று கேட்டபோது "எனக்கு அம்மாவின் ஞாபகம் வந்தது. அதனாலே அழுதேன்". என்று பிள்ளை கூறியது.

இங்கே இரண்டு விடயங்கள் பிள்ளைக்கு நடந்துள்ளன. ஒன்று சரீர நோயினால் கஷ்டப்பட்ட பிள்ளை, பாடசாலை சென்றதும் சரீரச் சோர்வால் மனவேதனை ஏற்பட்டுள்ளது. அடுத்த விடயம் என்னவென்றால்- இரு வாரங்கள் பாடசாலை செல்லாது இருந்தால், சிநேகிதிகள் குழுவில் இப்பிள்ளையைப் புறக்கணித்து விட்டனர். இரண்டுவாரம் வகுப்புக்கு வராததால் உனக்குப் படிப்பித்தது தெரியாது என்று- கலந்துரையாடலில் இப்பிள்ளையைக் குழுவினர் சேர்த்துக்கொள்வில்லை. இதுவும் பிள்ளையின் மனதில் வேதனையைக் கொடுத்தது. இதனாலேயே இடைவேளை நேரத்தில் அழுதது.

தந்தை ஒரு குடும்ப ஆலோசகராக இருந்ததால், பிள்ளையின் மனதைப் புரிந்து கொண்டார். அதிபருடன் தொடர்புகொண்டு நடந்ததைக் கூறினார். அதிபரோ, பிள்ளை விளையாடும் குழுவினரை அழைத்து, இத்தந்தையோடு கதைக்கவிட்டார். தந்தை குழுவினரிடம் "எங்கடை மகள் இரண்டு கிழமை பள்ளிக்கூடத்திற்கு வரேல்ல. அதனாலை படிப்பிச்சது ஒண்டும் தெரியலை என்று கலைப்படுறா. என்னாலை உங்கட வகுப்பில வந்து இருக்கமுடியாது. மகளுக்கு எப்பிடி உதவி செய்யலாம்?" என்று கூறினார். உடன் குழுவினர், "அங்கிள் நாங்கள் சொல்லிக் கொடுக்கிறோம்" என்று கூறி அப்பிள்ளையை அழைத்துச் சென்றனர். அன்றிலிருந்து பிள்ளை இடைவேளை நேரத்தில் அழுவதில்லை.

இங்கே சரீர நோய் மனதில் வேதனையை ஏற்படுத்தியது மட்டுமல்ல, குழுவால் புறக்கணிக்கப்பட்டதும் மனதில் வேதனையை ஏற்படுத்தியது எனலாம்.

இந்த வயதில் பிள்ளைகள் தமது குழுவினருடன் சேர்ந்து விளையாட ஆசைப்படும்போது, அதற்கு இடமளிக்க வேண்டும். வீட்டில் சேர்ந்து வேலைசெய்யவும் சில நேரங்களில் விரும்புவர். அண்ணன், தங்கையுடன் சேர்ந்து வேலை செய்ய, விளையாட விரும்புவர். இதனை உற்சாகப்படுத்த வேண்டும்.

ஆண்பிள்ளையானால் அப்பாவுடன் சேர்ந்து சிறுசிறு வேலைசெய்யச் சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும். இந்த வயதுவரை பிள்ளைகளுக்குத் தேவையானவற்றைப் பெற்றோர் செய்தனர். ஆனால், இந்த வயதில் பிள்ளைகளுடன் சேர்ந்து வேலைசெய்தல் வேண்டும். அப்பாவின் வேலைகளில் உதவும்போது, ஆண்பிள்ளை தன்னம்பிக்கையைப் பெறுகிறது. என்னால் வேலைசெய்ய முடியும் என்ற நம்பிக்கை வளரத் தொடங்குகிறது. அதேபோன்று, பெண்பிள்ளையைத் தாய் தனது வேலைகளில் சேர்த்துச் செய்தல் வேண்டும். பெரும்பாலான பெற்றோர்கள் தமது வேலைகளில் இந்த வயதிலுள்ள பிள்ளைகளைச் சேர்த்துக்கொள்வதில்லை. இவர்களால் இதைச் செய்யமுடியாது என்று பெற்றோர் கூறுவர். மரக்கறி வெட்டத் தருமாறு கேட்டால், உனக்கு வெட்டத்தெரியாது என்பர். நீ வெட்டினால் சாப்பிடவும் முடியாது போய்விடும் எனத் தாய் கூறுவாள். அழகான விதத்தில் வெட்டத் தெரியாது இருக்கலாம். இருந்தாலும், வேலை செய்யப் பழகவிடுவது நன்று. கத்தியால் கையை வெட்டி விடுவர் எனப் பெற்றோர் பயப்படுவர். சரியான விதத்தில் வெட்டச்சொல்லிக் கொடுத்தால் பிள்ளை கையை வெட்டாது பழகும். செய்யும் எல்லா வேலையையும் செய்யவிடாது தடுத்தால் அப்பிள்ளையின் தன்னம்பிக்கை இல்லாது போய்விடும்.

இந்த வயதிலுள்ள பிள்ளைகளின் முன்னால்- பெற்றோர் இறைவன்போன்று தோன்றி நிற்றல் பிழையானதாகும். சிறு வயதில் தனது பெற்றோர் எல்லாம் தெரிந்தவர்கள், பிழைவிடாதவர்கள் என்று நினைத்தனர். ஆனால் நடுத்தர வயதில், தமது பெற்றோர் பிழைவிடக்கூடியவர்கள், பெற்றோருக்கு தெரிந்த விடயங்களும் உண்டு, தெரியாத விடயங்களும் உண்டு. பொய்சொல்லிப் பிள்ளைகளுக்கு மாயை போன்று காட்டுவது பிழை. பெற்றோருக்குத் தெரியாது இருந்தால், எனக்குத் தெரியாது. நான் தெரிந்தவரிடம் கேட்டுச் சொல்கிறேன் என்று கூறும்போது, பெற்றோர்கள்- கடவுள் போன்று பிழை விடாதவர்கள் அல்லர். பெற்றோரும் பிழைவிடக் கூடியவர்கள் என்பதைப் பிள்ளைகளும் உணருவர்.

"அப்பா என்னைச் செய்யவேண்டாம் என்று எனக்குச் சொல்லிவிட்டு, நீங்கள் செய்யிறீங்கள்" என்று பிள்ளைகள் பெற்றோரைப் பார்த்துக் கேட்பர். அப்போது அவர்களை அதட்டாது "மகன் என்னை மன்னிச்சுக்கொள்ளுங்கோ. அப்பா பிழைவிட்டுப்போட்டன்" என்று கூறினால் இதுவே உயர்ந்த நிலையாகும்.

(தொடரும்....)

- எஸ்.ஜே. யோகராஜா

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P.- 021-2225108 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

பல்லார் முனியப் பயன்இல சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும்.

-திருக்குறள்

# நமது நோக்கு

## நிதானமும் நியாயமும் தவறிச் செல்லும் பாதை!

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்த சங்கரியின் அண்மைக்கால நடவடிக்கைகளும் போக்கும் - மக்களிடையே பலத்த எதிர்ப்புணர்வையும் விமர்சனங்களையும் உருவாக்கி வருகின்றன.

மிகுந்த பொறுப்புணர்வுடனும் நிதானத்துடனும் செயற்படவேண்டிய அவர் - தற்போது வெளியிட்டு வரும் கருத்துக்களும் அறிவிப்புக்களும் அமைதிச் சூழலைக் குழப்பவும், பகைமையுணர்வைத் தூண்டவும் முனைபவர்களுக்கே வாய்ப்பை அளிக்கும் ஆபத்தைத் தரும் என்பதை உணராதவராகவே நடந்து வருகின்றார்.

தமிழ் அரசியற் கட்சிகளில் பெரும்பான்மையானவை ஒன்றிணைந்து - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டமையானது - தமிழர் தரப்பின் குரலைப் பலப்படுத்தியதுடன், உணர்வு ரீதியாகவும் வலிமையைக் கொடுத்திருந்தது.

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்தை ஏற்று - விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்பதைத் தமிழ்க் கூட்டமைப்பு அறிவித்து தேர்தலில் போட்டியிட்டபோது - தமிழ் மக்கள் தமது ஏகோபித்த ஆதரவைத் தெரிவித்திருந்தனர்.

தமிழ்க் கூட்டமைப்பிலுள்ள கட்சிகள் - கடந்தகால அரசியல் வரலாற்றில் பல தவறுகளையும், ஏன் அப்பட்டமான துரோகங்களையும் தமிழ்மக்களுக்குச் செய்திருந்தபோதும் - விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்தை ஏற்று - ஒரே அணியாகப் போட்டியிட அவர்கள் முன்வந்தபோது - அதனை அடிப்படையாக வைத்தே, மக்கள் ஆதரவு கூட்டமைப்புக்குக் கிடைத்தது.

நாடாளுமன்ற அரசியலில் விடுதலைப் புலிகள் பங்கேற்காதபோது - விடுதலைப் புலிகளே, தமிழ்மக்களின் ஏக பிரதிநிதிகள், அவர்களுடனான பேச்சுக்களே - இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான, நியாயமான தீர்வைப் பெற்றுத்தரும் என்ற நிலைப்பாட்டை கூட்டமைப்பு பகிரங்கமாக அறிவித்ததன் பேரிலேயே - மக்களின் ஆதரவும், வெற்றியும் கூட்டமைப்புக்குக் கிடைத்தது என்பதை எவரும் மறுக்கமுடியாது.

கடந்த காலங்களில் - தமிழ் அரசியல்வாதிகளின் முயற்சிகள் அனைத்துமே - சிங்கள அரசாங்கங்களால் உதாசீனப்படுத்தப்பட்டு, ஏமாற்றப்பட்டு - தமிழர்களுக்கான அடிப்படை உரிமைகளைக் கூடத் தராமல் - இரண்டாந்தரப் பிரஜைகளாக்கி - அரசபயங்கரவாதம் மிலேச்சத்தனமாகக் கட்டவிழ்த்து விடப்பட்டபோது -

விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டமே தமிழ் மக்களைப் பாதுகாத்தது, தமிழர் தாயகத்தை மீட்டெடுக்க வைத்தது, தமிழர்களைத் தலைநிமிர வைத்தது.

இந்த உண்மையும், இந்த யதார்த்தமும்தான் - தமிழ் மக்களின் தலைமைத்துவம் விடுதலைப் புலிகளுக்கானது என்பதை வரலாற்றுக் காரணிகளால் உறுதிப்படுத்தியது.

விடுதலைப்புலிகளின் வீரம் நிறைந்த போராட்டமும், ஆயிரக்கணக்கான போராளிகளின் ஒப்பற்ற தியாகமும்தான் - இன்று சமாதானப் பேச்சுக்கள் நடாத்தி, பிரச்சினையைத் தீர்க்க முயற்சிப்போம் என முன்வருமளவுக்கு அரசாங்கத்தை அழுத்தியிருக்கிறது.

போராட்ட இயக்கமாக மட்டும் அன்றி - தமிழ்மக்களின் சக்தியாக, உயிரோட்டமாக - மக்களையும் புலிகளையும் வேறுபிரித்துவிட முடியாது என்ற நிலையில்- தமிழ்மக்களுக்காகப் பேசவல்ல, ஏக பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்பு -

அரசாங்கமும், இன்று சர்வதேசமும் அதனை அங்கீகரித்திருக்கின்றன.

இந்நிலையில் - விடுதலைப் புலிகளே ஏக பிரதிநிதிகள் என்று உரத்துச் சொல்லி அதன் மூலமாக நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்றுவிட்டு - இன்று முரண்பாடான கருத்துக்களைப் பேசும் ஆனந்தசங்கரியின் போக்கு, நியாயமும் நிதானமும் தவறியதொன்றென்பதோடு - தமிழ்மக்களையே ஏமாற்ற முனைவதுமாகும்.

தமிழ் அரசியல்வாதிகளின் செயற்பாடுகள் மீது நம்பிக்கை வைத்தோ, உறுதி வைத்தோ - மக்கள் தமது வாக்குகளை அவர்களுக்களித்து - நாடாளுமன்றத்துக்கு அனுப்பவில்லை. மாறாக - தமிழ்மக்களின் விடுதலைக்காகப் போராடும் விடுதலைப் புலிகளின் பாதைக்கு இவர்கள் துணைசேர்ப்பார்கள், நீதியான - நியாயமான- கௌரவமான தீர்வொன்றைப் பெறுவதற்கு இவர்கள் உதவுவார்கள் என்ற நம்பிக்கையினடிப்படையிலேயே மக்களின் வாக்குகள் அவர்களுக்கு அளிக்கப்பட்டன.

இந்த நம்பிக்கையையும், எதிர்பார்ப்பையும் சிதறடிப்பதாக - அமைதியைக் குலைக்க முனையும் சக்திகளுக்கு வாய்ப்பளிப்பதாக - குறுகிய அரசியல் இலாபத்துக்காக, பதவிகளுக்காகத் தம்மை ஆக்கிக்கொள்வதாக எவரும் நடக்க முனையின் - அவர்கள் மக்களுக்குத் துரோகமிழைப்பவர்களாகவே செயற்படுகின்றனர் என்றே கொள்ளமுடியும்.

# போராட்டம் உச்சநிலையை அடைவதற்கு முஸ்லிம்களின் பங்களிப்பும் மகத்தானது!

## மட்டு - அம்பாறை சிறப்புத் தளபதி ரமேஷ்



தளபதி ரமேஷ்

தமிழ்மக்களின் போராட்டம் மிகவும் உச்சக்கட்டத்திற்கு வளர்ச்சியடைந்து, இன்று சர்வதேச அங்கீகாரத்துடன் உயர்ந்த நிலையை அடைவதற்கு வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வாழும் முஸ்லிம் மக்கள் கடந்த காலங்களில் வழங்கிய பங்களிப்புக்கள் மகத்தானவை என்று மட்டு - அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஷ் தெரிவித்தார்.

செங்கலடி - பதுளை வீதியை அண்டியுள்ள முஸ்லிம்களுக்குச் சொந்தமான வயல்நிலங்களில் முஸ்லிம் மக்கள் மீண்டும் நெற்செய்கை மேற்கொள்ள அனுமதிப்பது தொடர்பாக இலுப்படிச்சேனையில் இடம்பெற்ற சந்திப்பில் கலந்து கொண்டு பேசியபோதே சிறப்புத் தளபதி ரமேஷ் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

பெரும்பான்மை சமூகத்தினால் அடக்கியொடுக்கப்பட்ட ஒரு சிறுபான்மைச் சமூகம், மற்றொரு சிறுபான்மைச் சமூகத்தை அடக்கியொடுக்கிவிட முற்படுவது பெரும் வரலாற்றுத் தவறாகும். முஸ்லிம்கள் விடயத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் ஒருபோதும் அவ்வாறு செயற்படமாட்டார்கள் என்று அவர் திட்டவட்டமாகக் கூறினார்.

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் பெரும்பான்மையான சக்திகளால், இலங்கைத் தமிழ்மக்களின் உரிமைகளை அரசியல், யாப்பு ரீதியாகவும், ஏனைய சட்டங்களூடாகவும், திட்டமிட்ட குடியேற்றங்களின் மூலமாகவும் பறிக்கப்பட்டன. இவ்வாறு இழந்த உரிமைகளை மீட்டெடுப்பதற்கு அரசியல் ரீதியான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. அவை அனைத்துமே வெற்றியளிக்காதநிலையில் இறுதி நடவடிக்கையாக ஆயுதமேந்திப் போராட நிர்ப்பந்திக்கப்பட்டதாகச் சிறப்புத் தளபதி ரமேஷ் மேலும் தமது உரையில் குறிப்பிட்டுள்ளார்.



சந்திப்பில் - பிரதி அமைச்சர் பசீர் சேகுதாவூத் உரையாற்றுகின்றார்.

# இனந்தெரியாத உயிர்கொல்லி நோய் இலங்கையிலும் பரவும் ஆபத்து!

## விமான நிலையத்தில் பாதுகாப்பு முன்னேற்பாடு

தென்கிழக்காசிய நாடுகளில் பரவிவரும் இனந்தெரியாத உயிர்கொல்லி நோய் - இலங்கையிலும் பரவலாம் என எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது. இதனால் கட்டுநாயக்க விமான நிலையத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

தென்கிழக்காசிய நாடுகளான ஜப்பான், வியட்நாம், ஹொங்கொங், சிங்கப்பூர் போன்றவற்றில் இனந்தெரியாத ஆட்கொல்லி நோய் பரவிவருகின்றது. இந்த நோயினால் உலகில் இதுவரை 50 பேருக்கு மேல் உயிரிழந்துள்ளனர்.

இந்நோய் விமானப்பயணிகள் மூலம் இலங்கைக்கும் பரவக்கூடிய சூழல் இருப்பதாகச் சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர். இதுவரை இலங்கை வந்த எந்தவொரு விமானப் பயணிக்கும் இந்நோய் தொற்றியிருப்பது கண்டுபிடிக்கப்படவில்லை.

ஆனால், முன்னெச்சரிக்கையாகக் கட்டுநாயக்க விமான நிலையம் உஷார்படுத்தப்பட்டிருக்கிறது.

விமானப்பயணிகளை உடல் பரிசோதனைக்குட்படுத்தும், பொதிகளைச் சோதனையிடும் சுங்க அதிகாரிகளுக்கு இந்நோய் தொடர்பான முன்னெச்சரிக்கை அறிவித்தல்கள் வழங்கப்பட்டிருப்பதோடு, மேற்படி நோய்க்கான அறிகுறிகளுடன் வரும் பயணிகளைக் கண்காணிக்கவும் உத்தரவிடப்பட்டிருக்கிறது.

நோய்க்கான அறிகுறிகளுடன் விமானநிலையத்துக்கு வரும் எந்தவொரு பயணிகளையும் உடனடியாக விமானநிலையச் சிகிச்சை நிலையத்துக்குக் கொண்டுசென்று, அங்கிருந்து கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்நோயினால் பாதிக்கப்பட்டோருக்கு தடிமன், இருமல், உயர்ந்தளவு காய்ச்சல், மூச்சுவிடச் சிரமம் ஆகிய அறிகுறிகள் இருக்கும் எனவும், இந்நோய் தொடர்பான எச்சரிகைகைச் சுவரொட்டிகள் விமானநிலையம் முழுவதும் ஒட்டப்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது.

## முக்கிய பிரச்சினைகள் பற்றி ஆராய கூட்டமைப்பு - பிரதமரை சந்திக்கும்

தமிழ்க் கூட்டமைப்புப் பிரமுகர்கள் - பிரதமரை ரணில் விக்கிரசிங்கவை மிகவிரைவில் சந்தித்துப் பேசவுள்ளனர்.

இச்சந்திப்பில் பல முக்கிய பிரச்சினைகள் பற்றி ஆராயப்படவுள்ளது. தற்போது நடைபெற்றுவருகின்ற தொண்டர் ஆசிரியர்களின் போராட்டம் தொடர்பாகவும், அவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பாகவும், யாழ்.நகரப் பகுதியில் இராணுவத்தினரின் பாரியமுகாம் அமைக்கப்படுவதை நிறுத்துவது தொடர்பாகவும், உயர்பாதுகாப்பு வலயத்தில் மக்கள் மீளக்குடியமர்வது தொடர்பாகவும் இச்சந்திப்பில் ஆராயப்படவுள்ளதாக கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

இச்சந்திப்பில் சகல கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும், கட்சித் தலைவர்களும் கலந்துகொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

# சாரதிகள், காப்பாளர்கள் பற்றாக்குறையால் நாளாந்தம் 30 ஆயிரம் ரூபா வருமான இழப்பு

## பருத்தித்துறை டிப்போ முகாமையாளர் முறையீடு

பருத்தித்துறை பஸ் டிப்போவில் சாரதிகள், காப்பாளர்கள் பற்றாக்குறை இருப்பதனால், நாள்தோறும் 30 ஆயிரம் ரூபா வருமானத்தை இழக்கவேண்டியநிலை உள்ளது. மக்களுக்குப் போதிய பஸ் சேவைகளை நடத்த முடியாமல் இருக்கிறது.

- இவ்வாறு பருத்தித்துறை பஸ் டிப்போ முகாமையாளர் எஸ்.கமலநாதன் தெரிவித்தார்.

பருத்தித்துறை டிப்போவிற்கு மத்திய போக்குவரத்துச்சபைத் தலைவர் எஸ்.பாரூக் அண்மையில் விஜயம் செய்திருந்தார். அங்கு நடந்த கலந்துரையாடலில் அவர் மேலும் கூறியதாவது,

பருத்தித்துறை டிப்போவில் சாரதிகள், காப்பாளர் பற்றாக்குறையால் நாள்தோறும் 30 ஆயிரம் ரூபா வருமானத்தை இழக்கவேண்டியுள்ளது. மக்களுக்குப் போதிய பஸ்சேவையை நடாத்தமுடியாமல் இருக்கிறது. 16 சாரதிகளும், 18 காப்பாளர்களும் உடனடியாகத் தேவைப்படுகின்றனர். இங்கு 36 பஸ்கள் இருக்கின்றன. இதில் 25 பஸ்கள் ஓடும்நிலையில் உள்ளன. 5 பஸ்கள் மேலும் தேவைப்படுகின்றன. பஸ்களுக்கு உதிரிப்பாகங்கள் பற்றாக்குறையும் நிலவுகின்றன. சாரதிகள், காப்பாளர்கள் இளைப்பாற்று மண்டபமும் புனரமைப்புச் செய்யவேண்டும் என்றார்.

மத்திய போக்குவரத்துச்சபைத் தலைவர் பாரூக் உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது,

யாழ்ப்பாணத்தில் வெகுவிரைவில் புனரமைக்கப்பட்ட பஸ் வண்டிகள் அனுப்பப்படவுள்ளன. இதில் பருத்தித்துறை பஸ் டிப்போவிற்கும் பஸ்கள் அனுப்பப்படவுள்ளன. சாரதிகள், காப்பாளர்கள் பற்றாக்குறையைப் போக்க 40 சாரதிகளும், 40 காப்பாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு இருவார காலப் பயிற்சி முடிவுற்றதும், அவர்களும் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.



போக்குவரத்துச் சபைத் தலைவர் மற்றும் அதிகாரிகள் பருத்தித்துறை டிப்போ ஊழியர்களுடன் கலந்துரையாடுகின்றனர்.

இன்றைய சமாதானநிலையிலே மக்களின் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. நிரந்தர சமாதானம் ஏற்படும்போது மக்களின் போக்குவரத்து வசதிகளும் சிறப்படைய துரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இதற்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் உதவிகளும் கிடைக்கும். சாரதிகள், காப்பாளர் தங்குமிடம் புனரமைப்புக்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். போக்குவரத்துச்சபை ஊழியர்களும், உத்தியோகத்தர்களும் - பிரயாணிகளுக்குச் சிறந்த போக்குவரத்துச் சேவைகளை வழங்கப் பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும். சேவை மனப்பான்மையுடன் சேவையாற்றும்போதுதான் பிரயாணிகள் சிறந்த சேவைகளைப் பெற்றுக்கொள்வர்.

வடபிராந்திய போக்குவரத்துச்சபைப் பொதுமுகாமையாளர். எஸ்.மணிவாசகம், டிப்போ பொறியியலாளர் எஸ்.கனகலிங்கம், தொழிற்சங்கத் தலைவர் எஸ்.அருமைத்துரை. ஆகியோரும் அங்கு உரையாற்றினர். (17)

# சீனாவின் நிர்வாகச் சுயாட்சிக்கு வழிவம் கொடுக்கும் அரச அவைகள்



கம்யூனிஸ்ட் நிர்வாகம்

சென்றவாரம் சீனாவில் மத்திய திட்டமிடல் குழு நிர்வாகச் சுயாட் சிகளாகத் தமது நாட்டினை அதிகாரப்பகிர்விற்கு உட்படுத்தி வருகின்றது எனப் பார்த்திருந்தோம்.

அவ்வாறு நிர்வாகச் சுயாட்சிகளைத் தமது நாட்டினில் ஏற்படுத்துவதற்கு எவ்வாறான நடைமுறைகளை, அது கையாண்டு வருகின்றது என்பதனை இன்று ஆராய்வோம்.

சீனாவில் சோசலிஷத் தத்துவம் மேலாண்மை பெற்றிருந்த போதும், நிர்வாகச் சுயாட்சி அலகுகளை உருவாக்கும்போது,

## சுயநிர்ணயம் ஒருபார்வை பகுதி-27

ஸ்ராலினின் சுயநிர்ணயத்தின் அளவுகோல்களின் அடிப்படையிலேயே சுயாட்சி அலகுகள் பிரிக்கப்பட்டுள்ளன.

அதாவது- பொதுமொழியினையும், மரபுவழித் தாயகத்தினையும், பொதுப்பொருளாதார வாழ்க்கை முறையினையும், பொதுக் கலாசாரத்தினையும் கொண்டமைந்த அலகுகளை - சுயாட்சி முறையில், அவ்வலகில் வாழும் மக்கள் தம்மைத் தாமே ஆளுமை செய்துகொள்ள அனுமதியளிக்கப்பட்டுள்ளனர்.

சீனாவில் இவ்வாறான சுயாட்சி வழங்கும்முகமாகச் சுயநிர்ணயத்தினைக் கொண்டமைந்த இனங்களை, 1954 ஆம் ஆண்டு சுயாட்சி அலகுகளாக வகுப்பதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்தபோது, 400 இனக்குழுமங்கள் தம்மைச் சுயநிர்ணயத்திற்குரியவை என அடையாளப்படுத்தின.

இதன் விளைவாகச் சுயநிர்ணயத தகுதியுடையவர்கள் யாரென விஞ்ஞானபூர்வமாக ஆராய்ந்து - அதாவது மொழியியல் அடிப்படையிலும் (**Language basic**), மானிடவியல் அடிப்படையிலும் (**Anthropological basic**) 55 இனக்குழுக்கள் சுயநிர்ணயத்திற்குரியவை என அடையாளப்படுத்தப்பட்டன. (இங்கு சுயநிர்ணயத்திற்குரியவை என்னும்போது, உள்ளக சுயநிர்ணயத்தினையே குறித்து நிற்கின்றது.)

இவ்வாறு உள்ளக சுயநிர்ணயத்தினைக் கொண்டமைந்த இனக் குழுமங்களுக்கு நிர்வாகரீதியான சுயாட்சியினைச் சீன மத்திய திட்டமிடல் குழுவும், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும் வழங்கியுள்ளன. வழங்கப்பட்ட முறையின் அடிப்படையினால் - சீனாவில் இனத்துவம் என்பது தேச உருவாக்கத்திற்கு வேண்டிய ஒரு கருவியாக மட்டுமே செயற்பட்டுள்ளது என மானிடவியலாளர்கள் எடுத்துரைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### அரச அவைகள்
### (State Councils)

சுயாட்சி அதிகாரத்தினை இந்த 55 இனக்குழுமங்கள் செயற்படுத் துவதற்காகவும், அமுல்படுத்துவதற்காகவும் 55 அரச அவைகள் (**State Councils**) உருவாக்கப்பட்டுள்ளன. இவ்வரச அவைகளுக் கான செயற்பாட்டு விதிமுறைகளையும், சட்ட அந்தஸ்தினையும் மக்கள் சீனக்குடியரசின் அரசியற்



உற்சாகத்துக்குக் குறைவில்லை!

திட்டத்தின் 95 ஆவது சரத்து எடுத்துக் கூறுகின்றது.

இச்சரத்தானது "சுயாட்சிக்கான உறுப்புக்கள்" (**Organs of self Government**) என வரையறுத்துக் கொண்டு - அரச அவைக்குரிய அதிகாரங்களை வரையறுத்துள்ளது.



டெங் ஸியாவோ பெங்

இதன்படி சீனாவின் ஒவ்வொரு அரசவையும் வரி அறவிடுவது மற்றும் அரசவைக்கு உட்பட்ட பொது நிதி முகாமைத்துவம், ஒழுங்கைப் பேணுவதற்கான உள்ளூர் பாதுகாப்புப் படைகள், அந்தந்த அரச அவைக்குட்பட்ட பொதுமக்களின் கலாசார அபிவிருத்தி, மொழி அபிவிருத்தி மற்றும் வழக்காறுகள், விழுமியங்கள் என்பவற்றின் பேணுகைகளுக்குப் பொறுப்பாக இருக்கும்.

இதேவேளை, உள்ளூர் மூலவளங்களை எடுத்துநோக்கும்போது, மத்திய திட்டமிடற்குழு அதிகாரமளித்த அளவிற்கு அது பயன்படுத்தப்படலாம். ஆனால், சீனாவில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய சிறப்பம்சம் எதுவெனில் - அதன் மத்திய திட்டமிடற்குழு எல்லா அரச அவைகளிற்கும் சம அளவில் மூலவளங்களைப் பயன்படுத்தும் அதிகாரங்களைக் கையளிக்கவில்லை. இதற்கு முக்கிய காரணம் - அது மத்திய திட்டமிடலின் கீழ், தான் ஒரு பொருளாதார வல்லரசாக உருவாக வேண்டும் என்ற சிந்தனையேயாகும்.

பொருளாதார மூலவளங்களை ஒதுக்குவது, திட்டமிடல் தொடர்பில் சீனா, இரண்டு கொள்கைகளைப் பின்பற்றி வரு

**வேலும் மயிலும் சேந்தன்**

கின்றது. ஒன்று - தனது உள்ளூர்த் தேவைகளுக்கு உள்நாட்டு மூலவளங்களைப் பயன்படுத்தி, மூடிய பொருளாதாரத்தின் கீழ் சுய தேவையை நிறைவுசெய்வது.

மற்றையது - சர்வதேச அரங்கில் பொருளாதார ரீதியாகத் தன்னை நிலைநிறுத்திக் கொள்வதற்காகச் "சோசலிஷ நவீனத்துவம்" (**Socialist Modernisation**) என்றும் அடிப்படையில் விசேட பொருளாதார வலயங்களை (**Special Economic Zones**) உருவாக் கியுள்ளது.

இவ்விசேட பொருளாதார வலயங்களுக்கு, விசேட அதிகாரங்கள் வழங்கப்பட்டு - வெளிநாட்டு முதலீடு, உயர் தொழில்நுட்பம் என்பவற்றைப் பெறுவதற்காக விசேட சலுகைகளையும், உட்கட்டமைப்பு வசதிகளையும் சீனா கொடுத்துள்ளது.

*(பிரதி செவ்வாய் தொடரும்)*

# நாய்ச் சங்கிலியால் கட்டப்பட்டிருந்த சிறுமி; உறுகொடவத்தை பகுதியில் நடந்தது என்ன?

மக்கள் சக்தி மாபெரும் சக்தி என்பார்கள். மக்கள் திரணடெழுந்தால் எப்படியான நிகழ்வுகள் ஏற்படும் என்பதைக் கொழும்பில் உறுகொடவத்தை - கம்கருபுர தொடர்மாடிச் சம்பவம் நிரூபித்துள்ளது. மார்ச் 26 ஆம் திகதி கம்கருபுர தொடர்மாடியிலுள்ள வீடொன்றில் நாய்ச்சங்கிலியால் கட்டப்பட்ட நிலையிலிருந்து 13 வயதுச் சிறுமியொருவர் பொதுமக்களால் மீட்கப்பட்டார்.

நான் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று, தொடர்மாடிக் குடியிருப்பாளர்களுடன் உரையாடிய போது பல்வேறு திடுக்கிடும் தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடிந்தது. இச்சம்பவம் நடைபெறுவதற்குச் சில தினங்களுக்கு முன்னர் குறிப்பிட்ட வீட்டிலுள்ள ஒரு துவாரத்தின் வழியாக "எனக்குப் பசிக்கிறது" என்று இரத்தத்தால் எழுதப்பட்ட துண்டொன்று வெளியே வீசப்பட்டுள்ளது. இந்த வீட்டிற்கு அருகில் பாண் பேக்கரி ஒன்று இருக்கிறது. அந்தப் பாண் பேக்கரியில் வேலை செய்யும் ஒருவர் அந்தத் துண்டை எடுத்து வாசித்துப் பார்த்த போது - பசிக்கிறது என்று எழுதப்பட்டிருந்தது.

சிறிது நேரத்தின் பின் மீண்டும் ஒரு துண்டு வீட்டிலுள்ள சிறிய துவாரத்தின் வழியாக வீசப்பட்டுள்ளது. பாண் பேக்கரியில் வேலை செய்யும் ஊழியருக்குச் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. அவர் அயலில் உள்ளவர்களுக்கு இப்படிக் கடிதம் எழுதப்பட்டுள்ளது எனக் கூறியுள்ளார். அயலவர்கள் - பொலிஸில் சென்று முறைப்பாடு செய்யுமாறு கூறியுள்ளனர்.

அவரும் கிராண்ட்பாஸ் பொலிஸில் முறைப்பாடு செய்தார். ஆனால், பொலிஸார் அவரது முறைப்பாட்டைக் கவனத்தில் எடுத்துக்கொள்ளவில்லையாம். உனக்கு விசர் என்று கூறித் துரத்திவிட்டனராம். அவர் மீண்டும் அயலவர்களுக்குக் கூறியுள்ளார்.

அயலவர்களுக்குச் சந்தேகம் ஏற்படத் தொடங்கிவிட்டது. அதன் பின்னர் ஊரில் உள்ள சிலர் வீட்டை நோட்டம் விட்டபோது, சிறுமியொருவரின் அழுகுரல் மிகவும் மெதுவாகக் கேட்பதை அவர்களால் உணரமுடிந்துள்ளதாம். அதன் பின் தொடர்மாடியில் வசிப்பவர்கள் கிராண்ட்பாஸ் பொலிஸாரின் கவனத்திற்கு மீண்டும் கொண்டுவந்துள்ளனர்.

பொதுமக்களின் முறைப்பாட்டைத் தொடர்ந்து அந்த வீட்டிற்கு வந்த பொலிஸார், வீட்டைத் திறந்து பார்த்துவிட்டு வீட்டினுள் எவரு

**நேரடி ரிப்போர்ட்**

மில்லை எனக் கூறியதுடன், பொது மக்களையும் அவ்விடத்தை விட்டுக் கலையுமாறு வற்புறுத்தியுள்ளனர்.

இந்த வீட்டை கிராண்ட்பாஸ் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சப்இன்ஸ்பெக்டர் ஒருவரின் தலைமையிலான குழுவே வந்ததாகப் பொதுமக்கள் கூறுகின்றனர். சோதனையிட்ட பின் பொலிஸார் வீட்டிற்குள் ஒருவரும் இல்லை என்று கூறியதை எவருமே ஏற்கவில்லை.

பொதுமக்கள் வாக்குவாதப்பட- அந்த பொலிஸ் உத்தியோகத்தர், வீட்டிற்குள் சிறுமி இல்லை. சிறுமி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் பொலிஸ் சீருடையைக் கழற்றி விட்டு, நாட்டாமை வேலைக்குப் போவதாக மக்களுக்குச் சவால் விட்டுவிட்டுச் சென்றிருக்கின்றார்.

பொதுமக்கள் சம்பவம் நடந்த வீட்டைவிட்டு அகலாமல் அவ்விடத்திலேயே அமர்ந்திருந்து நீதி கேட்டனர். இது இவ்வாறிருக்கச் சில இளைஞர்கள் ஒன்று கூடிச் சிறுமியை எப்படியாவது மீட்பது என்று முடிவு செய்தனராம். நள்ளிரவு நேரம் அருகிலுள்ள பௌத்த விகாரையிலுள்ள மதகுரு ஒருவரையும் அழைத்துக்கொண்டு வீட்டின் பின் பக்கக் கதவை உடைத்துக் கொண்டு உள்ளே சென்றுள்ளனர். இவர்களுடன் வீட்டிற்குக் காவலில் இருந்த பொலிஸாரும் சென்றுள்ளனர்.



மீட்கப்பட்ட சிறுமி

அவ்வீட்டில் பழைய பொருட்கள் போடப்பட்டிருந்த அறைப்பகுதியைச் சோதனையிட்டபோது, மூன்று அடி உயரமான கட்டிலுக்கு அடியில் இச்சிறுமி சுருண்டநிலையில் இருந்துள்ளார். இச்சிறுமியுடன் சேர்த்து நாய்க்குட்டி ஒன்றும் கட்டிப் போடப்பட்டிருந்தாம். சிறுமியின் கால்கள் நாய்ச் சங்கிலியால் கட்டப்பட்டிருந்ததாம். அதுமட்டுமல்லாமல் சிறுமியின் வாய் துணியால் கட்டப்பட்டும் இருந்துள்ளதாம். கட்டிலுக்கு அடியில் இரும்புக் கம்பிகளால் கூடு போன்று செய்யப்பட்டிருந்த இடத்திலேயே இச் சிறுமி மறைத்து அடைக்கப்பட்டிருந்ததாகச் சிறுமியை மீட்கச் சென்றவர்களில் ஒருவர் கூறினார். அது மட்டுமல்லாமல், இன்னொரு தகவலையும் அவர் சொன்னார். மீட்கும்போது சிறுமியின் உடலில் எந்தவிதமான துணியும் இருக்கவில்லை என்றும் கூறினார்.

அவரிடம், சிறுமியுடன் சேர்த்து ஏன் நாயும் கட்டப்பட்டிருந்தது என்று கேட்டதற்கு அவர் சொன்னார் - நாய் நன்கு பயிற்றுவிக்கப்பட்டுள்ளது. சிறுமி கத்தினால் கடிப்பதற்கு ஏற்றமுறையில் அந்த நாய் பழக்கப்பட்டுள்ளது.

சிறுமியின் உடலில் நாய் கடித்ததற்கான அடையாளங்களும் காணப்பட்டதாகவும் அவர் சொன்னார்.

சிறுமி கத்தும்போதெல்லாம் நாய் கடித்திருக்கிறது. அது மட்டு

**கொழும்பிலிருந்து —உதரன்**

மல்ல நாய்க்கும் பசிக்கும்போதெல்லாம் சிறுமியைக் கடித்திருக்கிறது என்றும் அவர் சொன்னார்.

சிறுமி - நாய் கடிக்கும் என்ற பயத்தினால் கத்தாமல் இருந்ததாகவும் அவர் குறிப்பிடுகின்றார். இந்தத் தகவலைச் சொன்ன அவர், தன்னைப் பற்றிய தகவலை வெளியே சொன்னால் தனது உயிருக்கு ஆபத்தாகிவிடும் என்றும் கூறினார்.

அச்சிறுமியைக் கிராண்ட்பாஸ் பொலிஸாரிடம் - உறுகொடவத்தைப் பௌத்த விகாரை தேரர் ஒருவர் மூலமே ஒப்படைத்தனர்.

இந்த வீட்டிற்குக் கொண்டு வரப்பட்ட பதின்மூன்றாவது சிறுமி இவர் என்று பொதுமக்கள் கூறுகின்றனர். 12 சிறுமிகளுக்கும் என்ன நடந்தது என்று எவருக்குமே தெரியாதாம்.

சிறுமி மீட்கப்பட்டதைத் தொடர்ந்து பொதுமக்களுக்கும் பொலிஸாருக்குமிடையே மோதல்கள் உருவாகின. பொதுமக்கள் மீது பொலிஸார் தாக்குதல்களில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்ட இளைஞர்கள் சிலரையும் அவர்கள் கைது செய்யத் தவறவில்லை. கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்யுமாறும், பொலிஸாரை இடமாற்றம் செய்யுமாறும் பொதுமக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடலாயினர்.

பொதுமக்கள் கற்கள், போத்தல்கள் கொண்டு பொலிஸார் மீது தாக்குதல் தொடுக்க, பொலிஸார் இறப்பர் குண்டுகளைப் பயன்படுத்தித் தாக்குதல் மேற்கொண்டனர். அது மட்டுமல்ல, கண்ணீர்ப் புகைக்குண்டுகளையும் பயன்படுத்தினர்.

சம்பவம் நடைபெற்ற இடத்தில் பல இடங்களில் ரயர்கள் போட்டு எரிக்கப்பட்டிருந்தன. உறுகொடவத்தை பகுதி யுத்தகளமாகவே சில நாட்கள் காட்சிதந்தன.

இது இவ்வாறிருக்க, கடந்த வெள்ளிக்கிழமை (மார்ச் 28) பொதுமக்கள் - பொலிஸாரின் உதவியுடன் சிறுமி அடைத்துவைக்கப்பட்டிருந்த வீட்டைச் சோதனைசெய்தனர். அப்போது வீட்டில் இருந்து துர்நாற்றம் வெளிவந்ததாம். அதனால் வீட்டின் தரைப் பகுதியைத் தோண்டியுள்ளனர்.

தரைப்பகுதியைத் தோண்டிய போது, பல திடுக்கிடும், அதிர்ச்சியூட்டும் தடயங்கள் கிடைத்தன. பாடசாலைச் சிறுமிகளின் சீருடைகள், சிறுமிகளின் ஆடைகள் என்பன கிடைத்துள்ளன. இவ்வுடைகள் மூன்று வயது முதல் 10 வயதுக்கு உட்பட்டவர்களுடையதாம்.

*(நாளை தொடரும்...)*

# ஈராக் போர்க்களம்

# பஸ்ரா நகரைக் கைப்பற்ற பிரிட்டிஷ் படைகள் முயற்சி


## ஒரு மைல் தொலைவில் கடும் மோதல்



(லண்டன்)

ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரான பஸ்ராவை கைப்பற்றுவதற்கான கடும் போரில் பிரிட்டிஷ் படைகள் தொடர்ந்து ஈடுபட்டுள்ளன. பஸ்ராவில் இருந்து ஒரு மைல் தொலைவில் உள்ள அபு அல் காசிப் என்ற கிராமத்தில் தற்போது பிரிட்டிஷ் - ஈராக்கியப் படைகள் கடுமையாக மோதிவருகின்றன.

இதேசமயம் - ஈராக்கில் கடந்த 12 தினங்களாக நடைபெற்ற போரில், அமெரிக்கப் படைகளில் 38 பேர் பலியானதாகவும், 19 படையினர் காணாமற்போயுள்ளதாகவும், பிரிட்டிஷ் தரப்பில் 25 படையினர் பலியானதாகவும் கூட்டுப்படைக் கட்டளையகம் தனது உத்தியோகபூர்வ அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளது.




ஈராக் மீதான போரை எதிர்க்கும் இந்தியச் சிறுமியொருத்தி.


# ஈரான், சிரியா நாடுகள் மீது அமெரிக்க அமைச்சர் பாய்ச்சல்!

## எல்லையூடாக ஈராக்கிற்கு உதவுகின்றனவாம்




ஈராக்கின் அயல்நாடான சிரியாவுக்கும் ஈரானுக்கும் அமெரிக்கா மீண்டும் எச்சரித்துள்ளது. ஈராக்கின் பயங்கரவாதத்துக்கு சிரியா நேரடியாக உதவுவதைக் கைவிட வேண்டும் என, அமெரிக்க உள்துறை அமைச்சர் கொலின் பவல் எச்சரித்துள்ளார். அமெரிக்கா - இஸ்ரேல் பொதுஜன விவகாரக்குழுக் கூட்டத்தில் பேசியபோதே கொலின் பவல் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

முன்னதாக, இரவுப்பார்வைக் கண்ணாடிகளை ஈராக்கிற்கு சிரியா வழங்கியதாக அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் ரம்ஸ் ஃபீல்ட் குற்றஞ்சாட்டியிருந்தார். அமெரிக்கா தனது தோல்விகளை மறைத்து திசைதிருப்ப வெளியிடும் ஆதாரமற்ற குற்றச்சாட்டே இது என சிரியா மறுத்திருந்தது. லெபனான் பத்திரிகை ஒன்றுக்குப் பேட்டியளித்த சிரிய ஜனாதிபதி பஷார் அல் அசாத், அமெரிக்காவின் தாக்குதல் பட்டியலில் அடுத்ததாக சிரியா வரலாம் எனக் கூறியுள்ளார்.



ஈராக்கிய காவலரணை அமெரிக்க டாங்கி நெருங்கியதும் - பொறிவெடியினால் காவலரண் தகர்க்கப்படுகிறது.

# ஈராக்கியப் போரினால் அரபுலகில் எழுச்சி நிலை



(பஸ்ரா)

ஈராக்கில் நடைபெறும் போர், அரபு நாடுகளில் ஒரு உத்வேகத்தையேற்படுத்தியுள்ளதாக அப்பகுதிகளில் உள்ள மேற்குலகச் செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அரபு நாடுகளின் தொலைக் காட்சிகள், தமது வழமையான நிகழ்ச்சிகளைக் குறைத்து ஈராக் போர் தொடர்பான தகவல்களையே உடனுக்குடன் அறிவித்து வருகின்றன. 'பாருங்கள் எங்கள் ஈராக்கிய சகோதரர்கள் திருப்பியடிக்கிறார்கள்' என்று உற்சாகம் பொங்க அரபு நாட்டினர் தமது தொலைக்காட்சிகளின் முன் உற்சாகமாகக் குரலெழுப்புவதாக இந்தச் செய்தியாளர்கள் கூறுகின்றனர்.



சொந்த இடங்களை விட்டு வெளியேறும் ஈராக்கியப் பெண்கள்.

## நஸ்ரியாவுக்கு மேலதிக படை; அமெரிக்கா அனுப்புகின்றது!

(நஸ்ரியா)

பக்தாத் நோக்கிய தமது நகர்வுக்குக் கேந்திர இடமாக இருக்கும் நஸ்ரியா நகரைப் பாதுகாக்கவென, மேலதிகமாக ஆயிரக்கணக்கான படைகளை அமெரிக்கா அந்த நகருக்கு அனுப்பியுள்ளது. நஸ்ரியாவில் ஈராக்கியப் படைகள் கடுமையான எதிர்த்தாக்குதல் நடாத்துவதால், மேலதிக படைகளை அங்கு அனுப்பவேண்டிய நிலை அமெரிக்க அதிகாரிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை - ஈராக்கியப் படைகளின் கவனத்தைத் திசை திருப்புவதற்காக, கூட்டுப்படைகளின் விமானங்கள் பக்தாத் மீது மாறிமாறி கடும் குண்டுவீச்சை நிகழ்த்தி வருகின்றன.



வீடு வீடாகச் சோதனைகள்.

## ஐ.நாவின் உதவிப் பொருட்கள் ஈராக் வந்துசேர்ந்தன



தென் ஈராக்கிற்கான ஐ.நாவின் உதவிப் பொருட்கள் சென்றடைந்துள்ளன. பல லொறிகளில், நீர் மற்றும் உணவுப்பொருட்கள் குவைத் எல்லை தாண்டி எடுத்துவரப்பட்டன. 13 லொறிகள் நீர் விநியோகத்தை உம் கசார் நகரில் மேற்கொண்டுள்ளன.

வடக்கு ஈராக்கிற்கும் யுனிசெப்பின் உதவிப் பொருட்கள் அடங்கிய லொறிகளின் அணி ஒன்று துருக்கியூடாக அனுப்பப்பட்டுள்ளது.

உலகவலம்




நிஸானும், டற்சனும் இப்போது அகதிகள் உயிர்காக்கும் வாகனங்கள்.



'விடுங்கள் என்னைத் திரும்பிச் செல்ல' - திமிறிச்செல்லும் ஈராக்கியர், பிரிட்டிஷ் படையினரால் பலவந்தமாகத் தடுக்கப்படுகின்றார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# புலிகளோடு மட்டுமே பேச்சுவார்த்தை என்பதில் உறுதியாக இருக்கிறேன்

## அவர்களின் தியாகங்களை மதிப்பதாக ஆனந்தசங்கரி அறிக்கை

"விடுதலைப்புலிகள் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் இல்லை" என்று நான் கூறியதாக உருவாகியிருக்கும் சர்ச்சைக்கு இத்துடன் முற்றுப்புள்ளி வைக்குமாறு மிகப்பணிவாக வேண்டுகின்றேன். யார்யாரோ எல்லாம் அறிக்கை விடுவதும், சிலர் தங்களை பெரும் உத்தமர்கள் போல் காட்டிக் கொண்டு என்னைப் பற்றி நியாயமற்ற முறையில் பத்திரிகைகளில் விமர்சிப்பதும் வேதனை தருகிறது என, தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

நான் நாடாளுமன்ற ஆசனத்தை வெறும் சம்பிரதாயமாகப் பாவிக்கவில்லை. விடுதலைப்புலிகளின் மீதான தடையை நீக்குங்கள் என்று எத்தனை தடவை நாடாளுமன்றத்திலும, வெளியிலும் வலியுறுத்திப் பேசினேன். ஒருதடவை நாடாளுமன்றத்தில் பாதுகாப்பு அமைச்சரைப் பார்த்து, "பளைப் பிரதேசத்தை 10 ஆண்டுகள் சென்றாலும் உங்களால் மீளப் பிடிக்க முடியாது" என்றும், "ஆனையிறவைப் பிடிப்பது வெறும் பகற்கனவு" என்றும் கூறியுள்ளேன். இன்னொரு தடவை பாதுகாப்பு அமைச்சரை நேரடியாகவே சபையில் வைத்து, "36,000 இராணுவத்தினரின் உயிரைக் காப்பாற்றித் தாருங்கள் என்று வெளிநாட்டு அரசுகளை மீண்டும் மண்டியிட்டுக் கேட்கவேண்டிய சந்தர்ப்பம் வராது என எண்ணாதீர்கள்" என்றும் இப்படி எத்தனையோ தடவைகள் விடுதலைப் புலிகளின் சார்பில் தனித்து நின்று பேசியுள்ளேன். மேலும் நாடாளுமன்றத்தில் பார்வையாளராக வருகை தந்த நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் அவர்களை, சிஹல உறுமய கட்சியின் தலைவர் திலக் கருணாரட்ண மிக மோசமாக விமர்சித்த பொழுது, ஆளுங்கட்சியிலும் சரி எதிர்க்கட்சியிலும் சரி உறுப்பினர்கள் பேசாதிருந்தபோது, நானே எழுந்து நாட்டுமக்கள் சார்பில் மன்னிப்புக் கேட்டதுடன், அவரது பணிகளின் அவசியத்தையும், சமாதானத்தின் தேவையையும் வலியுறுத்திப் பேசியதையும், அதற்காக சிங்கள இனவாதிகளிடம் அன்றிரவு முழுவதும் வாங்கிக் கட்டியதையும் நினைவுகூருவது பொருத்தமானதாகும். எரிக் சொல்ஹெய்ம் அவர்களை நான் நோர்வேயில் தனியாகச் சந்தித்துப் பேசிய பொழுது, விடுதலைப்புலிகள் குறித்து என்ன பேசினேன் என்பதை அவரிடமே கேட்டு அறிந்து கொள்வது நல்லது. இவற்றை யாராலும் மறுக்க முடியாது. இவை எல்லாம் எனது பிதற்றலா? உளறலா? அல்லது தங்களைப் பெரும் உத்தமர்கள் என்று கூறிக்கொண்டு எனது வார்த்தைகளை உளுத்துப்போன அரசியல் என்று கூறுவதுபோல் உளுத்துப் போன வார்த்தைகளா?

நான் விடுதலைப்புலிகளின் தியாகத்தையும், அர்ப்பணிப்புக்களையும் மதிக்கிறேன். எமது கட்சிக்கு ஏற்பட்ட கசப்பான சில அனுபவங்களை எல்லாம் மறந்து தமிழ் மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு, களத்தில் நின்று போராடி தியாகங்கள் செய்த தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மட்டும்தான் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்பதில் மிக உறுதியாக இருக்கிறோம். இதுதான் தேர்தலுக்கு முன்பு நாம் செய்து கொ[...] புரிந்துணர்வு ஒப்பந்தம். கூட்டமைப்பிலுள்ள 4 கட்சிகளில், கூட்டணி தவிர்ந்த 3 கட்சிகள் தாம் கையெழுத்திட்ட தேசியப் பட்டியல் ஒப்பந்தத்தை அறியாது பிதற்றியது போலவே தற்போதும், தாம் கையெழுத்திட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெளிவாகக் கூறப்பட்டிருப்பதை அறியாது கருத்துக் கூறுகிறார்கள்.

தமிழீழ விடுதலைப்புலிகள் தான் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்று கூறுகின்ற உரிமை நானறிந்த வரை ஒருவருக்குத்தான் உண்டு. அவர் ஈரோஸ் பாலகுமார். அவர்தான் விடுதலைப் புலிகளை ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டு, தனது இயக்கத்தை முடக்கி வைத்துவிட்டு, விடுதலைப் புலிகளின் அங்கமாக இணைந்துகொண்டு அவர்களுடன் இயங்கிவருபவர். இதனால் அவர் ஒருவர்தான் அந்த உரிமையையும், தகுதியும் பெ[...]ருக்கிறார். இந்த விடயத்தில் என்[...] விமர்சித்து அறிக்கை விடுபவர்கள் திரு.பாலகுமாரை முன்னுதாரணமாக ஏற்றுச்செயற்பட முன்வருவார்களா?

விடுதலைப்புலிகளும், அரசும் இனப்பிரச்சினை சம்பந்தமாக பேச்சு நடத்திக் கொண்டிருக்கும் இவ்வேளையில், அம்முயற்சிக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி எதுவித இடைஞ்சல்களையோ முட்டுக்கட்டைகளையோ போடாமல், அவர்களுக்கு உந்து சக்தியாக இருந்து பூரண ஒத்துழைப்பை வழங்கும் என்பதை மீண்டும் வலியுறுத்தி, இப்பிரச்சினைக்கு இத்துடன் முற்றுப்புள்ளி வைக்கவும் விரும்புகிறேன் என அதில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# பாலசிங்கத்தின் கூற்று தனக்கு அபாயமானதாம்

## ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறுகிறார்

(கொழும்பு)

தம்மைப்பற்றி விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ள கருத்துக்களால், தமது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதென ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அண்மையில் அமைச்சர்கள், மேல்மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றப்பிரதிநிதிகள் மத்தியில் உரையாற்றும் போது ஜனாதிபதி இக்கருத்தை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆறு சுற்றுக்களைக் கடந்துள்ள போதிலும், அடிப்படைப் பிரச்சினைகளில் கவனம் செலுத்தப்படவில்லை.

அரசாங்கம் மாறினாலும் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றுவதாகக் கூறிய பாலசிங்கம், இப்பொழுது - அவ்வாறான மாற்றம் ஏற்படுமானால் யுத்தம் மீண்டும் ஆரம்பமாகும் என்று கூறியிருக்கிறார்.

நான்தான் சமாதானத்துக்குத் தடையாக இருப்பதாக பாலசிங்கம் கூறியுள்ளார். ஜனாதிபதி அதிகாரத்தில் இருக்கும்வரை சமாதானப் பேச்சுவார்த்தைகள் வெற்றி அளிக்கமாட்டாது என்றும் அவர் கூறியிருக்கிறார். பாலசிங்கத்தின் இந்தக் கூற்றுக்கள் எனது உயிருக்கு அச்சுறுத்தலாக இருக்கின்றன.

ரணில் விக்கிரமசிங்கவின் கைகள் பலப்படுத்தப்பட வேண்டும் என்றும், தமது அமைப்பு அடுத்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியின் வெற்றிக்கு உழைக்கும் என்றும் பாலசிங்கம் கூறியிருப்பது அபாயகரமானது என்று ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

# வைகோவுக்கு எதிரான முறையீடு திருத்த இந்திய அரசு திட்டம்

இந்திய மத்திய அரசு, பொடா சட்டத்தின் கீழ் வைகோவை கைது செய்தது சரியானது என்று நீதிமன்றத்துக்கு முன்பு தெரிவித்த முறையீட்டை தற்போது திருத்த உள்ளதாக அறிவித்துள்ளது.

வைகோவின் பேச்சை முழுமையாகக் கணக்கில் எடுத்துக்கொண்டு அர்த்தப்படுத்திப் பார்த்தால், அது பேசப்பட்ட சூழலையும் கருத்தில் கொண்டால் வைகோவின் பேச்சு பொடா சட்டப்பிரிவுகளின் கீழ் குற்றமாகக் கருதமுடியாது என்கின்ற புதிய பகுதியை இணைக்க வேண்டும் என்று மத்திய அரசின் வழக்கறிஞர் கோரிக்கை வைத்தார்.

இதைக் கேட்ட நீதிபதிகள், வழக்கில் சம்பந்தப்பட்ட தமிழக அரசு மற்றும் வைகோ ஆகியவர்களின் தரப்பில் ஆட்சேபங்கள் தெரிவிக்கப்படாதுவிட்டால், மாற்றப்பட்ட மனுவை மத்திய அரசு தாக்கல் செய்யலாம் என்று தெரிவித்தனர்.

## விஞ்ஞானச் சங்க தங்கப்பதக்க விருது

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் 11 வது வருடாந்த அமர்வுகள் நாளை புதன்கிழமை ஆரம்பமாகி மூன்று நாட்கள் நடைபெறவுள்ளன.

கடந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பேராசிரியர் கந்தையா பாலசுப்பிரமணியம் தங்கப்பதக்க விருது, மரவள்ளி மற்றும் பனை சம்பந்தப்பட்ட பல சர்வதேச அங்கீகாரம் பெற்ற ஆய்வுகளை மேற்கொண்ட உயிர் இரசாயனவியற் பேராசிரியர் ஈ. ஆர். ஜான்ஸுக்கு இவ்வாண்டு வழங்கப் படுகிறது.

## 14 குடும்பங்கள் மன்னார் திரும்பின

தென்னிந்தியாவின் மண்டபம் அகதி முகாமில் இருந்து பதினான்கு குடும்பங்கள் நேற்று மன்னார் திரும்பியுள்ளன. தலைமன்னாரைச் சேர்ந்த ஆறு குடும்பங்களும், பேசாலையைச் சேர்ந்த எட்டுக் குடும்பங்களுமே இவ்வாறு நாடு திரும்பியவர்களாவர். இவர்களில் 17 ஆண்களும், 14 பெண்களும், 3 சிறுவர்களும் அடங்குவர். இவர்களை மீளக் குடியமர்த்த வேண்டிய சகல ஏற்பாடுகளையும், அந்தந்தக் குடும்பங்களுக்குரிய பிரதேச செயலாளர்கள் கவனிக்கத் தொடங்கியுள்ளனர்.

## நோர்வே..

விசாரணை நடத்துவதற்கோ சட்டரீதியான வாய்ப்புக்கள் இல்லை என்றும் அவர் நீதிமன்றில் குறிப்பிட்டார்.

இதனை அடுத்து, சிங்கள தேசிய சங்கம், ஜே.வி.பி. ஆகியன தாக்கல் செய்த மனுவில், பிரதிவாதிகளாகக் குறிப்பிட்ட தூதுவர் ஜோன் வெஸ்பேர்க்கைத் தவிர ஏனையோரை, மே மாதம் 9 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## மாநகர...

அமைக்கப்படுவதை விடுதலைப் புலிகள் கடுமையாக எதிர்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக, ஹெக்கோனில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது சுட்டிக்காட்டப்பட்டதுடன், மாற்று நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், மக்களது மாபெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை சந்திக்க நேரிடும் என்று, புலிகளின் பிரதிநிதிகள் அரசதரப்பினரிடம் தெரிவித்திருப்பதாக அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் தமது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதனால், யாழ். இராணுவ பிரிகேட் தலைமையகத்தை மீளமைப்பது தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானத்தை யாழ்.மக்களின் சார்பாக மறுபரிசீலனை செய்யுமாறு கோருவதுடன், மாநகர சபை எல்லைக்கு வெளியே வேறு இடம் ஒன்று தெரிவுசெய்யுமாறும் விடுதலைப் புலிகள் பாதுகாப்பு அமைச்சரை . வலியுறுத்தியுள்ளனர். அத்துடன் இதுபற்றித் தம்முடன் ஆலோசிக்குமாறும் புலிகள் பாதுகாப்பு அமைச்சரிடம் கேட்டுள்ளனர்.

## திருமலையில்...

குண்டுகளும் மீட்கப்பட்டன.

இவ் வெடிபொருட்கள் மீட்கப்பட்டதுடன், திருகோணமலை பொலிஸார் இது குறித்து விசாரணைகளையும் ஆரம்பித்துள்ளனர். (04)

## லங்கா முடித...

மூழ்கிவிட்டதாகப் படையினர் தெரிவித்துள்ளனர். காயமடைந்தவர்களில் இரு படையினர் திருமலை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

லங்கா முடித கப்பல் மீது தாக்குதல் நடத்திய படகு, விடுதலைப் புலிகள் பயன்படுத்தும் படகின் அமைப்பில் இருக்கவில்லை எனத் தெரிவித்த மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, புலிகள் தாக்குதல் நடத்தியிருக்கக்கூடிய வாய்ப்[...]ம் நிராகரிக்க முடியாது என்றார்.

இச் சம்பவம் நடந்தபோது, லங்கா முடிதவுக்குப் பாதுகாப்பாக வந்த டோராப் படகுகளில் ஒன்றில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதி ஒருவரும் இருந்துள்ளார். எனினும், தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் குறித்த தகவல் இவருக்குப் பின்பே தெரியவந்ததாம்.

இத் தாக்குதலில், தமது நிறுவனத்துக்குச் சொந்தமான லங்கா முடித கப்பலுக்கு எந்தவித சேதமும் ஏற்படவில்லை என, இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத் தலைவர் முஸாமில் தெரிவித்தார். படையினர், தமது கூட்டுத்தாபனத்திடம் போக்குவரத்துத் தேவைக்காக லங்கா முடித கப்பலை வாடகைக்குப் பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.53 | 96.97 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 158.59 | 159.95 |
| 1 யூரோ | 104.02 | 105.20 |
| 1 சுவிஸ் பிராங் | 70.66 | 71.81 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 56.41 | 57.41 |
| 1 ஜப்பானிய யென் | 00.81 | 00.82 |
| 1 சவூதி றியால் | 25.82 | 25.82 |

கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்
Best Bank in Srilanka
Institute of Informatics Studies
இலங்கை வங்கி
தேசத்தின் வங்கியாளர்
பூபாலசிங்கம் புத்தகசாலை
Elephant house
Necto
அனுசரணையில்
நமது ஈழநாடு நடாத்தும்
க.பொ.த (உயர்தரம்) 2003
வர்த்தகப் பிரிவுக்கான
மாபெரும் இலவச முன்னோடிக் கருத்தரங்கு
விபரங்கள் விரைவில் நமது ஈழநாடு நாளிதழில் வெளிவரும்

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 01.04.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.